Postal Reg.No. GDP-39/2017-2019

بسم الله الرحمن الرحيم نحمده ونصلّی علی رسوله الکریم وعلی عبده المسیح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ


தொகுதி 2

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 37

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

22 துல்ஹஜ் 1438 ஹிஜ்ரி கமரி 14 தபூக் 1396 ஹிஜ்ரி ஷம்ஸி
14 செப்டம்பர் 2017


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**டூயி என்ற பெயரில் அமெரிக்காவில் வசித்து வந்த ஒரு நபர் இருந்தான். தான் ஒரு இறைத் தூதர் என்று அவன் வாதம் செய்தான். அவன் இஸ்லாத்தின் கடுமையான எதிரியாக இருந்தான். நான் இஸ்லாத்தை வேரறுத்து விடுவேன் என்று அவன் கருதி வந்தான். அவன் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை இறைவன் என்று நம்பி வந்தான். என்னுடன் முபாஹலா செய்யுமாறு நான் அவனுக்கு கடிதம் எழுதினேன். அத்துடன் அவன் முபாஹலா செய்யாமல் இருந்தாலும் கூட இறைவன் அவனை அழித்து விடுவான் என்றும் எழுதியிருந்தேன்.**

# வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

**இருபத்தி எட்டாவது அடையாளம்:** ஆத்மாராம் என்பவரது பிள்ளைகளின் மரணம் தொடர்பான முன்னறிவிப்பாகும். இருபது நாட்களில் அவரது இரு மகன்கள் இறந்து விட்டனர். குர்தாஸ்பூரில் என்னுடன் வழக்கில் ஆஜராக வந்திருந்த ஜமாஅத்தின் மக்கள் இந்த முன்னறிவிப்பிற்கு சாட்சிகளாக இருக்கின்றனர்.

**இருபத்தி ஒன்பதாவது அடையாளம்:** குர்தாஸ்பூரின் மாஜிஸ்ட்ரேட்டும் எக்ஸ்ட்ரா அஸிஸ்டென்டுமான லாலா சந்து லால் அவர்களின் பதவி குறைப்பு தொடர்பான முன்னறிவிப்பாகும். அவர் குர்தாஸ்பூரிலிருந்து பணிமாற்றம் செய்யப்பட்டு முல்தானின் நீதிபதியாக அங்கு சென்று விட்டார்.

**முப்பதாவது அடையாளம்:** டூயி என்ற பெயரில் அமெரிக்காவில் வசித்து வந்த ஒரு நபர் தொடர்புடையதாகும். அவன், தான் ஒரு இறை தூதர் என்று வாதம் செய்து வந்தான். இஸ்லாத்தின் கடுமையான எதிரியாக அவன் இருந்தான். நான் இஸ்லாத்தை வேரறுத்து விடுவேன் என்று அவர் கருதி வந்தான். அவன் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை இறைவன் என்று நம்பி வந்தான். என்னுடன் முபாஹலா செய்யுமாறு நான் அவனுக்கு கடிதம் எழுதியிருந்தேன். அத்துடன் அவன் முபாஹலா செய்யாமல் இருந்தாலும் கூட இறைவன் அவனை அழித்து விடுவான் என்றும் எழுதியிருந்தேன். இந்த முன்னறிவிப்பு அமெரிக்காவிலுள்ள பல பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டது. நமது ஆங்கில பத்திரிகையிலும் வெளியிடப்பட்டது. இதன் விளைவு எவ்வாறு வெளிப்பட்டது என்றால் பல இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை அவன் இழக்க வேண்டியது வந்தது. அவனுக்கு மிகப்பெரும் இழிவு ஏற்பட்டது. சுயமே அவன் பக்கவாத நோயால் பிடிக்கப்பட்டான். இப்போது ஓர் அடி கூட எடுத்து வைத்து அவனால் நடக்க முடியவில்லை. மக்கள் ஒவ்வோர் இடத்திற்கும் அவனை தூக்கிச் செல்கின்றனர். அமெரிக்காவிலுள்ள மருத்துவர்கள் இப்போது அவன் சிகிச்சை அளிப்பதற்கு தகுதியுள்ளவன் அல்ல. ஒருவேளை சில மாதங்களில் அவன் இறந்து விடுவான் என்று கருத்து தெரிவித்துள்ளனர்.

**முப்பத்தி ஒன்றாவது அடையாளம்:** டாக்டர் மார்ட்டின் கிளார்க் தொடர்பான வழக்கில் நான் குற்றமற்றவனாக விடுதலை செய்யப்படுவது தொடர்பான முன்னறிவிப்பாகும். அவர் எனக்கு எதிராக நான் அவரை கொல்ல முயற்சி செய்ததாக வழக்கு தொடர்ந்திருந்தார். பிறகு இந்த முன்னறிவிப்பிற்கேற்ப நான் குற்றமற்றவனாக விடுவிக்கப்பட்டேன்.

**முப்பத்தி இரண்டாவது அடையாளம்:** வரி ஏய்ப்பு செய்ததாக என் மீது தொடரப்பட்ட வழக்கு தொடர்பாக செய்யப்பட்ட முன்னறிவிப்பாகும். தீங்கு விளைவிக்கின்ற சில மக்கள் ஆங்கிலேய அரசுக்கு என்னைப் பற்றி இவருக்கு ஆயிரக்கணக்கான ரூபாய் வருவாய் இருக்கின்றது. எனவே இவருக்கு வரி விதிக்க வேண்டும் என்று செய்தி தெரிவித்தனர். இதில் அவர்கள் தோல்வி அடைவார்கள் என்பதை அல்லாஹ் எனக்கு வெளிப்படுத்திக் காட்டினான். பிறகு அவ்வாறே நிகழ்ந்தது.

**முப்பத்தி மூன்றாவது அடையாளம்:** குர்தாஸ்பூரின் டெப்டி கமிஷனரான மிஸ்டர் டூயி அவர்களிடம் எனக்கு தண்டனை பெற்றுத் தர வேண்டும் என்ற எண்ணத்தில் இராணுவ நீதிமன்றத்தில் போலீஸ் தொடர்ந்த ஒரு வழக்கு பற்றியதாகும். அது தொடர்பாக இறைவன் அத்தகைய முயற்சிகளைச் செய்பவர்கள் தோல்வி அடைவர் என்று என்னிடம் தெரிவித்தான். பிறகு அவ்வாறே நிகழ்ந்தது.

இது தொடர்பாக اناتجالنا فانقطع العدو واسبابه அதாவது நாம் வாளேந்தி போர் செய்தோம். அதன் விளைவாக எதிரி அழிந்து விட்டான். அவனது பொருள்களும் கூட அழிந்து விட்டன என்று இறைவன் என்னிடம் கூறினான். இங்கு எதிரி என்று கூறப்பட்டிருப்பது டெப்டி கமிஷனர் ஆவார். அவர் பகைமையின் காரணமாக உண்மைக்கு மாற்றமாக இந்த வழக்கை உருவாக்கி இருந்தார். இறுதியில் பிளேக் நோயால் அழிந்து விட்டார்.

**முப்பத்தி நான்காவது அடையாளம்:** எனது ஒரு மகன் இறந்து போனான். எதிரிகள் அவர்களது வழக்கத்திற்கேற்ப இந்த மகன் மரணமடைந்ததனால் தங்களது பெரு மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். அப்போது இறைவன் எனக்கு நற்செய்தி வழங்கியவாறு இந்த மகனுக்குப் பகரமாக விரைவில் இன்னொரு மகன் பிறப்பார். அவரது பெயர் மஹ்மூது ஆகும் என்று கூறினான். அவரது பெயர் சுவரில் எழுதப்பட்டிருப்பது எனக்கு காட்டப்பட்டது. அப்போது நான் ஒரு பச்சை நிற பிரசுரத்தில் நமது கருத்திற்கு உடன்படுபவர்கள் மற்றும் நமது எதிரிகளான ஆயிரக்கணக்கான மக்களுக்கு தெரியும் வகையில் இந்த முன்னறிவிப்பை வெளியிட்டோம். இப்போது முதல் மகன் மரணித்து எழுபது நாட்கள் கூட கழிந்திருக்காத நிலையில் இந்த மகன் பிறந்துள்ளார். இவருக்கு மஹ்மூது அஹ்மது என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பைஅத்தில் தம்மை இணைத்துக் கொண்டிருக்கிற ஒவ்வோர் அஹ்மதியும் ஆன்மீக நல்லொழுக்க அறிவு மற்றும் கொள்கை மேம்பாட்டிற்காக ஓர் உடன்படிக்கை செய்கிறார். M.T.A என்னும் அருளை அல்லாஹ் நமக்கு வழங்கி இருக்கக்கூடிய இக்காலத்தில் ஜமாஅத் நிகழ்ச்சிகள், மாநாடுகள், குத்பாக்கள் ஆகியவற்றிலும் எல்லாவற்றிற்கும் மேலாக உலகளாகிய பைஅத் நிகழ்ச்சியில் M.T.A மற்றும் இன்டர்நெட் மூலமாக இலட்சக்கணக்கானோர் கலந்து கொள்கின்றனர். எனவே எந்தவோர் அஹ்மதியும் பிறப்பு அஹ்மதியோ அல்லது தானே பைஅத் செய்து அஹ்மதிய்யத்தில் இணைந்தவரோ எவரும் பைஅத் உடன்படிக்கையைப் பற்றி எமக்கு தெரியாது என்று கூற இயலாது. பைஅத் செய்ததற்குப் பிறகு அதன் விபரங்களை அறிந்து கொள்வதற்கான தேவை மட்டுமே உள்ளது. பைஅத்தின் உறுதிமொழியை முன்னிறுத்த வேண்டும்.

நாம் ஆய்வு செய்தால், நம்முன் கவலைப்படத்தக்க எண்ணிக்கையிலான மக்கள் பைஅத் உடன்படிக்கை செய்த நிலையில் இந்த விஷயங்களைச் செயல்படுத்துவதில்லை என்பது தெரிய வருகின்றது.

அஹ்மதி வக்கீல்களாகட்டும், இரு தரப்பினராகட்டும் அவர்களது பைஅத் உறுதிமொழி மற்றும் இறையச்சத்திற்கு தமது பலன்களை விட அவர்கள் முன்னுரிமை தர வேண்டும்.

ஒரு நம்பிக்கையாளருடைய பணி என்னவென்றால், சண்டைகளை நீளமாக்கிக் கொண்டே செல்வதற்கும், தமது பிடிவாதத்தில் நிற்பதற்கும் பதில் அல்லாஹ்வின் திருப்திக்காக தமக்குள் மென்மையை உருவாக்க வேண்டும். ஜமாஅத் அமைப்பிடம் அல்லது கஸாவிடம் தமது விவகாரங்களைக் கொண்டு வர வேண்டும். நாம் ஒருவருக்கொருவர் சகோதரர்கள் ஆவோம். நமது தவறான எண்ணம் மற்றும் அனுமதிக்கப்படாத முறையீடுகளை அகற்றி ஒருவருக்கொருவர் அன்பு நேசத்துடன் வாழ்வைக் கழிக்க வேண்டும்.

நாம் சண்டைகளை அழகிய முறையில் முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்றால் பிடிவாதத்தை விட வேண்டும். இன்னும் சொல்வதாயின், சில நேரங்களின் சண்டைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு உரிமை இருந்தாலும் கூட அதனை வாங்குவதற்காக எதிர் தரப்பிற்கு அவகாசம் தருவது அவசியமாகும். சில நேரங்களில் ஓரளவுக்கு உரிமைகளை விட்டுக் கொடுக்க வேண்டியதும் வருகிறது.

அல்லாஹ்வுடைய கருணை மற்றும் மன்னிப்பை ஈர்ப்பதற்காக நாம் உலகில் நமது விவகாரங்களில் ஒருவர் மற்றவருடன் மென்மை மற்றும் கருணையுடன்நடந்து கொள்ள வேண்டும். கடுமையும், தண்டனையும், தமது உரிமையை மட்டுமே கவனத்தில் கொள்தலும் கூடாது.

பரஸ்பரம் ஒருவர் மற்றவருடன் உள்ள கொடுக்கல் வாங்கல், கடன்களைப் பெறுதல் மற்றும் திருப்பிச் செலுத்துதல் ஆகிய விவகாரங்களில் உண்மையுடனும் நேர்மையுடனும் விவகாரங்களுக்கு முடிவு எடுப்பது, கஸாவின் தீர்ப்பை ஏற்றுக் கொள்வது, பிடிவாதத்தையும் அகந்தையையும் விட்டு விடுவது ஆகியவை தொடர்பாக திருக்குர்ஆன் மற்றும் நபிமொழிகளின் ஒளியில் இஸ்லாத்தின் போதனைகளை எடுத்துக் கூறியவாறு ஜமாஅத் சகோதரர்களுக்கு ஹுஸூர் அவர்கள் முக்கியமான அறிவுரைகளை வழங்கினார்கள்.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் மார்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**11 ஆகஸ்டு 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 -ஆம் ஆண்டு **ஸஹுர்** மாதம் **11 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ ـ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ـ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ـ اِيَّاكَ نَعْبُدُ
وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ ـ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ـ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ـ

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பைஅத்தில் தம்மை இணைத்துக் கொண்டிருக்கிற ஒவ்வோர் அஹ்மதியும் ஆன்மீக நல்லொழுக்க அறிவு மற்றும் கொள்கை மேம்பாட்டிற்காக ஓர் உடன்படிக்கை செய்கிறார். M.T.A என்னும் அருளை அல்லாஹ் நமக்கு வழங்கி இருக்கக்கூடிய இக்காலத்தில் ஜமாஅத் நிகழ்ச்சிகள், மாநாடுகள், குத்பாக்கள் ஆகியவற்றிலும் எல்லாவற்றிற்கும் மேலாக உலகளாகிய பைஅத் நிகழ்ச்சியில் M.T.A மற்றும் இன்டர்நெட் மூலமாக இலட்சக்கணக்கானோர் கலந்து கொள்கின்றனர். எனவே எந்தவோர் அஹ்மதியும் பிறப்பு அஹ்மதியோ அல்லது தானே பைஅத் செய்து அஹ்மதிய்யத்தில் இணைந்தவரோ எவரும் பைஅத் உடன்படிக்கையைப் பற்றி எமக்கு தெரியாது என்று கூற இயலாது.

பைஅத் செய்ததற்குப் பிறகு அதன் விபரங்களை அறிந்து கொள்வதற்கான தேவை மட்டுமே உள்ளது. பைஅத்தின் உறுதிமொழியை முன்னிறுத்த வேண்டும். நாம் பைஅத்தின் நிபந்தனைகளுள் விளக்கப்பட்டுள்ள நல்லொழுக்க நிபந்தனைகளை ஒருவர் தம்முன் நிறுத்தினால் நமது நல்லொழுக்கத்தின் தரம் சமூகத் தொடர்புகள், தொழில் விவகாரங்கள், அன்றாட கொடுக்கல் வாங்கல் விவகாரங்கள், வீட்டு விவகாரங்கள் ஆகிய இவையனைத்திலும் ஓர் அசாதாரணமான முன்னேற்றம் ஏற்பட முடியும். ஆனால் நம்மில் பலர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் பார்க்க விரும்புகிற இந்த தரத்தை விட்டு மிகவும் தூரத்தில் இருக்கின்றனர். உதாரணமாக இது தொடர்பாக பைஅத் நிபந்தனைகளில் கவனமூட்டப்பட்டவற்றுள் ஒரு சில நிபந்தனைகள் இவ்வாறு உள்ளது.

பொய் பேசக் கூடாது. அநீதி இழைக்கக் கூடாது. நம்பிக்கை மோசடி செய்வதிலிருந்து விலக வேண்டும். மன எழுச்சிகளில் மூழ்கி விடக் கூடாது. பொதுவாக உலக மக்களுக்கும் குறிப்பாக முஸ்லிம்களுக்கும் தமது மன எழுச்சிகளின் காரணமாக கை அல்லது நாவினால் தொல்லை தரக் கூடாது. தற்பெருமை கொள்ளக் கூடாது. எளிமையைக் கடைபிடிக்க வேண்டும். நன்னடத்தையை வெளிப்படுத்தியவாறு வாழ்வைக் கழிக்க வேண்டும். பொதுவாக மனித இனத்திற்கு பயன் தர முயற்சி செய்ய வேண்டும். (இஸாலே அவ்ஹாம். ரூஹானீ கஸாயின் தொகுதி 3 பக்கம் 563-564) நாம் இந்த விஷயங்களில் கவனம் செலுத்தினால் நான் கூறிய போன்று நல்லொழுக்கத்தின் தரத்தை உயர்த்த முடியும். நமக்குள் நல்லொழுக்கத்தின் உயர் தரத்தை நிலைநாட்ட இயலும். நல்லொழுக்கத்தின் உயர் தரத்தை எய்வது மட்டுமின்றி அதன் உச்சநிலையைத் தொட முடியும். ஆனால் நாம் ஆய்வு செய்தால், நம்முன் கவலைப்படத்தக்க எண்ணிக்கையிலான மக்கள் பைஅத் உடன்படிக்கை செய்த நிலையில் இந்த விஷயங்களைச் செயல்படுத்துவதில்லை என்பது தெரிய வருகின்றது. நாம், சொந்த வாழ்க்கையில் இந்த நிலைமையைக் கடைபிடித்தவாறு செயல்படும்போது அல்லது நாம், நமது உரிமைகளைத் தியாகம் செய்தவாறு அல்லது நம்மை கஷ்டப்படுத்திக் கொண்டு உயர் நல்லொழுக்கத்தைக் கடைபிடிக்கும்போது நாம் நிச்சயமாக இந்த நல்லொழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும் என்று உரத்த குரலில்

கூற முடியும். அவ்வாறு செய்யாதவர் பெரும் அநீதியிழைக்கிறார். ஆனால் ஒருவர் நேரடியாக பாதிப்பிற்குள்ளாகும்போது நம்மில் பெரும்பாலார் இந்த நல்லொழுக்கத்தை மறந்து விடுகின்றனர். தேவைப்படும்போது விவகாரத்தை திரித்து வளைத்து எடுத்துரைக்கின்றனர். அதில் உண்மை இருப்பதில்லை. மாறாக, அது பொய்யிற்கு மிக அருகில் போய் விடுகிறது. தமது உரிமையைப் பெறுவதற்காக சிலர் அநீதியும் கூட இழைக்கின்றனர். சில வேளைகளில் சிலர் நம்பிக்கை மோசடி செய்யும் நிலைக்கும் வந்து விடுகின்றனர். பொய்யான சாட்சியங்களை, தம்மை நம்பிக்கை மோசடியிலிருந்து விடுவிப்பதற்காக எடுத்து வைக்கின்றனர். கையினால் இல்லா விட்டாலும் நாவினால் தமது நோக்கத்தை எய்துவதற்காக மற்றவர்களுக்கு கஷ்டம் தந்து விடுகின்றனர். பணிவைக் காட்டுவதற்குப் பதில் அகம்பாவம் மிகைத்து விடுகின்றது. அநேக நேரங்களில் தற்பெருமை கூடவோ குறையவோ வந்து விடுகிறது. நான் பார்த்துள்ளேன். கஸாவின் சில விவகாரங்கள் என் முன் வருகின்றன. பொய் மற்றும் உண்மையை நிரூபிப்பதற்குப் பதிலாக உரிமைகளை (மட்டும்) வாங்குவதற்குப் பதிலாக அடம்பிடித்தல் மற்றும் பிடிவாதம் எந்த அளவுக்கு அவர்களிடமிருந்து வெளிப்படுகிறது என்றால் வியப்பு ஏற்படுகிறது. தொழில்களில் உண்மையை அடிப்படையாகக் கொள்வதற்குப் பதில் சுயநலனைப் பெறுவதில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. இதற்கு மேலாக இரு தரப்பு வக்கீல்களுமே தமது தொழில் திறமையைக் காட்டுவதற்கும், தமது பெருமையை நிலைநாட்டுவதற்காகவும் தவறான விளக்கங்–களைத் தருகின்றனர். அது பொய்யாக இருக்கிறது. அது கொடுக்கல் வாங்கல் பிரச்சனையாக இருக்கட்டும் அல்லது கணவன் மனைவி சண்டை அல்லது ஏதாவது ஒரு வகை பிரச்சனையாக இருக்கட்டும். வக்கீல்களின் காரணத்தாலேயே பிரச்சனைகள் நீண்டு விடுகின்றன.

எனவே, அஹ்மதி வக்கீல்களாகட்டும், இரு தரப்பினராகட்டும் அவர்களது பைஅத் உறுதிமொழி மற்றும் இறையச்சத்திற்கு தமது பலன்களை விட அவர்கள் முன்னுரிமை தர வேண்டும். சரியான முறையிலோ அல்லது தவறான முறையிலோ அனுமதிக்கப்பட்ட அல்லது அனுமதிக்கப்படாத வழிகளில் புகார்களும் முறையீடுகளும் இதனால் உருவாகிறது என்பது வெளிப்படையாகும். தவறான எண்ணம் உருவாகிறது. இந்நிலையில் ஒரு நம்பிக்கையாளருடைய பணி என்னவென்றால், சண்டைகளை நீளமாக்கிக் கொண்டே செல்வதற்கும், தமது பிடிவாதத்தில் நிற்பதற்கும் பதில் அல்லாஹ்வின் திருப்திக்காக தமக்குள் மென்மையை உருவாக்க வேண்டும். ஜமாஅத் அமைப்பிடம் அல்லது கஸாவிடம் தமது விவகாரங்களைக் கொண்டு வர வேண்டும். நாம் ஒருவருக்கொருவர் சகோதரர்கள் ஆவோம். நமது தவறான எண்ணம் மற்றும் அனுமதிக்கப்படாத முறையீடுகளை அகற்றி ஒருவருக்கொருவர் அன்பு நேசத்துடன் வாழ்வைக் கழிக்க வேண்டும் என்பது நமது முயற்சியாக இருக்க வேண்டும். ஆனால் உரிமையைக் கோருபவரும் தருபவரும் இருவருமே பிடிவாதக்காரர்களாக இருந்தால், ஜமாஅத் அமைப்பு அல்லது கஸா அல்லது தேசிய நீதிமன்றம் இவை அனைத்தும் எவ்வளவு தான் நீதியின் அடிப்படையில் அமைந்த தீர்ப்பை வழங்கினாலும் விவகாரம் ஒருபோதும் முடிவை எட்டாது. ஒரு நீதிமன்றத்திற்குப் பிறகு இன்னொரு நீதிமன்றம் என அப்பீல் செய்து கொண்டே செல்கின்றனர். பிறகு கஸாவிலுள்ள ஐந்து பேர் கெண்ட குழு தீர்ப்பு வழங்கினாலும் கூட சில வேளைகளில் உரிமையைத் தர வேண்டியவர் உரிமையைத் தருவதில்லை. அல்லது தீர்ப்பை ஏற்றுக் கொள்வதில்லை. அல்லது எம் மீது பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது. நீங்களே இந்த விவகாரத்தைக் கவனியுங்கள் என்று எனக்கு எழுதுகின்றனர். இந்தப் புகார் ஒருபோதும் முடிவதே இல்லை.

உண்மையில் நான் கூறியதுபோன்ற இது அகம்பாவம் மற்றும் பிடிவாதத்தின் வெளிப்பாடாக இருக்கிறது. ஆகவே நாம் சண்டைகளை அழகிய முறையில் முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்றால் பிடிவாதத்தை விட வேண்டும். இன்னும் சொல்வதாயின், சில நேரங்களின் சண்டைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு உரிமை இருந்தாலும் கூட அதனை வாங்குவதற்காக எதிர் தரப்பிற்கு அவகாசம் தருவது அவசியமாகும். சில நேரங்களில் ஓரளவுக்கு உரிமைகளை விட்டுக் கொடுக்க வேண்டியதும் வருகிறது. இதுபற்றி அல்லாஹ் நமக்கு என்ன போதனையைத் தருகிறான்? அல்லாஹ் கூறுகிறான்:

وَاِنۡ كَانَ ذُوۡ عُسۡرَةٍ فَنَظِرَةٌ اِلٰى مَيۡسَرَةٍ ؕ
وَاَنۡ تَصَدَّقُوۡا خَيۡرٌ لَّـكُمۡ اِنۡ كُنۡتُمۡ تَعۡلَمُوۡنَ

ஒருவர் கஷ்டப்படுபவராக வந்தால் அவர் பொருள் வசதி பெறும் வரை அவகாசம் தர வேண்டும். அவர் தான் கொடுத்த கடனை மன்னித்து விட்டால் அதனை தானமாக வழங்கி விட்டால் நீங்கள் அறிவுடையவராக இருப்பின் அது மிகவும் நல்லது. **(2:281)**

எனவே உங்கள் மீதும் அத்தகைய நிலை வரலாம். கட்டாய சூழ்நிலை வரலாம் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். பிறகு எல்லாவற்றிற்கும் மேலாக அல்லாஹ் நமது அதிகமான விவகாரங்களை விட்டு விடுகின்றான். அல்லாஹ் எல்லா சக்திகளு உடையவனாக இருக்கின்றான். அவன் நமது விவகாரங்களில் நம்மை பிடிக்க ஆரம்பித்தால் நமக்கு எந்த புகலிடமும் இருக்காது. ஆகவே நாம் மற்றவரின் விவகாரத்தில் மென்மை மற்றும் அவகாசம் வழங்குவதை கடைபிடிக்க வேண்டும். இது அடிப்படையான வழிகாட்டலாகும்.

அன்றாட விவகாரங்களிலும் தொழில் விவகாரங்களிலும் கடன் கொடுக்கல் வாங்கல்களிலும் இதனை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நம்பிக்கையாளர்களுக்கு மீண்டும் மீண்டும் இவ்வாறு கவனமூட்டியுள்ளார்கள்: ''நீங்கள் உலகில் கருணை மற்றும் மென்மையைப் பயன்படுத்துங்கள். இதனால் இறைவன் வானத்தில் உங்கள் மீது கருணையுடன் நடந்து கொள்வான்.'' (சுனன் அபூதாவூது கிதாபுல் அதப் பாபு ∴பிர்ரஹ்மத்தி ஹதீஸ் 4941) அது அல்லாமல் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். நமக்கும் ஒருநாள் கணக்கு கொடுக்க வேண்டியதுள்ளது. அல்லாஹ் நீதியை மட்டும் கவனத்தில் கொண்டு தீர்ப்பு வழங்கினால் மன்னிப்பு கிடைப்பது மிகவும் சிரமமாகி விடும். எனவே, அல்லாஹ்வுடைய கருணை மற்றும் மன்னிப்பை ஈர்ப்பதற்காக நாம் உலகில் நமது விவகாரங்களில் ஒருவர் மற்றவருடன் மென்மை மற்றும் கருணையுடன்நடந்து கொள்ள வேண்டும். கடுமையும், தண்டனையும், தமது உரிமையை மட்டுமே கவனத்தில் கொள்தலும் கூடாது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் கடனை திருப்பி வாங்குபவர் கடன் பெற்றவரிடம் மென்மையுடன் நடப்பவராயின் அவருக்கு நற்கூலியின் நற்செய்தியை வழங்கியுள்ளார்கள். இந்த வகையில் ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''எந்த மனிதர் ஒருவரிடம் கடன் தொகையைத் திருப்பிப் பெற வேண்டியதுள்ளதோ அவர் நிர்ணயிக்கப்பட்ட காலம் கடந்த பிறகு அவகாசம் தரும்போது அவருக்கு அவகாசமாக கழிகிற ஒவ்வொரு நாளும் ஸதகாவாகும்.'' (சுனன் இப்னி மாஜா கிதாபுஸ் ஸகாத் பாபு இன்ஸாருல் முஅஸ்ஸிர் ஹதீஸ் 2418)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்: ''ஸதகாவும் தானதருமங்களும் பிரச்சனைகளையும் துன்பங்களையும் அகற்றுகின்றது.'' (கன்ஸுல் உம்மால் தொகுதி 6 பக்கம் 148 ஹதீஸ் 15978. பைருத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் 2004 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது) இது எவ்வளவு உயரிய வாணிபம்! உங்கள் சகோதரருக்கு அவகாசம் தருவது உங்களுக்கு நற்கூலிக்குக் காரணமாக அமைகிறது. பெரும் தொல்லைகள் மற்றும் பிரச்சனைகளிலிருந்து நம்மைக் காப்பாற்றவும் செய்கிறது. ஆகவே அல்லாஹ் சிறிதளவு நன்மையையும் கூட கூலியின்றி விடுவதில்லை. திருக்குர்ஆனின் இந்த பொன்மொழியை நினைவில் கொள்ளுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வழிகாட்டலை முன்னிறுத்துங்கள். அதன் மூலம் ஓர் அமைதி நிறைந்த சமூகம் நடைமுறைக்கு வரும். அமைதியின்மை பரவாது. மன உளைச்சல்கள் நீண்டு கொண்டே போகாது. தீர்ப்புகளை நடைமுறைப்படுத்தும் அமைப்புக்கும் கஷ்டம் இருக்காது. அவர்கள் இந்த பிரச்சனையை தீர்க்கும் நேரத்தில் ஏதாவது ஆக்கப்பூர்வமான பணிகளுக்கான திட்டம் தீட்ட முடியும். கஸாவுக்கும் தொல்லை இல்லாமல் போகும். கஸா இந்த நோக்கத்திற்காகவே அதாவது தீர்ப்பு வழங்குவதற்காகவே அமைக்கப்பட்டதாக இருப்பினும் தீர்ப்பை ஏற்பதில் இரு தரப்பும் மென்மையாக நடந்து கொண்டால் காரணமில்லாத தொல்லைகள் ஏற்படாமல் இருக்கும். சில நேரங்களில் ஒரேயொரு விவகாரம் நீண்டு கொண்டு செல்வதன் காரணமாக மற்ற விவகாரம் பாதிக்கப்படுகிறது. அது நிகழாமல் இருக்கும். இரு தரப்பினருமே நீதிமன்றங்களுக்கு

போவதற்காக வக்கீல்களை ஏற்பாடு செய்யும் செலவைச் சமாளிக்க வேண்டியதுள்ளது. அதுவும் அவர்களுக்கு மிச்சமாகும். சிலர் எந்த அளவுக்கு பிடிவாதக்காரராக இருக்கின்றனர் என்றால் தமது நஷ்டத்தைக் கூட சகித்துக் கொள்வர். ஆனால் தீர்ப்பு தமக்கு சாதகமாக வர வேண்டும் என்று விரும்புகின்றனர். அதற்காக எங்கு வேண்டுமானாலும் போகத் தயாராகின்றனர்.

பிறகு நான் கூறியது போன்று எனக்கும் எழுதுகிறார்கள். சில தரப்பினர் 'நீங்களே இந்த விவகாரத்தைப் பாருங்கள்' என்கின்றனர். இவர்கள் பிடிவாதம் பிடிக்காமல் இருந்தால் எனது நேரமும் இந்த சர்ச்சைகளில் வீணாவதைத் தடுக்க முடியும். நான் சில வேளைகளில் விவகாரங்களைப் பார்த்த பிறகு இரு தரப்பிற்கும் பதில் தருகிறேன். அது அவர்களின் விருப்பத்திற்கேற்ப இல்லை எனில் மீண்டும் தமது பிடிவாதத்தில்தான் நிற்கின்றனர். 'நாங்கள்தான் சரி' என்கின்றனர். தீர்ப்பு நமக்கு சாதகமாகவே வர வேண்டும். எதிர் தரப்பிற்கு வசதியும் செய்து தரமாட்டோம் என்பதுதான் பிடிவாதமாகும். நான் தெளிவாக எழுதிய பிறகும் கூட சில வேளைகளில் மிகவும் பிடிவாதத்துடன் 3 –வது அல்லது 4 –வது மாதம் எழுதுகின்றனர். நாங்கள் எங்கள் விவாகரத்தை எழுதியுள்ளோம். நாங்கள் உண்மையில் உள்ளோம். தீர்ப்பை திரும்பவும் பார்க்க வேண்டும் என்கின்றனர். எங்களது உரிமையை வாங்கித் தர வேண்டும் என்கின்றனர். கஸாவின் தீர்ப்பு நூற்றுக்கு நூறு சதவீதம் சரியானது என்று நான் கூறவில்லை. ஆனால் 80–85 சதவீதம் சரியாகவே இருக்கும். சாட்சியங்கள் மற்றும் வாக்குமூலங்களின் அடிப்படையில் அவை சரியாகவே இருக்கின்றன. தவறாகவே இருந்தாலும் நிய்யத்தை சந்தேகம் கொள்ள முடியாது. நீதிபதிகள் நல்ல எண்ணத்தில்தான் தீர்ப்பு வழங்குகிறார்கள்.

ஆகவே, ஒரு தரப்பின் கருத்தின்படி அவர் தன்னை உரிமைக்குரியவராகக் கருதும் நிலையில் தீர்ப்பு மாற்றமாக வந்து விட்டால் கஸாவின் மீது அல்லது காஸியின் மீது குற்றம் சாட்டக் கூடாது. அவர்களின் மீது குற்றம் சாட்டும் வழக்கம் சிலருக்கு ஏற்பட்டு விடுகிறது. அவர்கள் ஆய்வின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கின்றனர். ஒரு தீர்ப்பில் குழப்பம் இருப்பதாக ஒரு தரப்பில் கூறப்பட்டால் நானே அந்த ஃபைலை பார்க்கிறேன். ஆனால் நான் ஏற்கனவே கூறியது போன்று பெரும்பாலான தீர்ப்புகள் சரியாகவே இருக்கின்றன. தவறான எண்ணங்களினால் மட்டும் ஐயப்பாடுகள் எழுப்பப்படுகின்றன. எனவே தவறான எண்ணத்திலிருந்து விலக வேண்டும். தவறான எண்ணம் பிறகு இன்னொரு தீமையின் வாசலைத் திறக்கிறது. கஸாவின் விவகாரங்கள் நேரடியாக கொடுக்கல் வாங்கலின் அடிப்படையில் இருக்கலாம். தொழில் ரீதியானதாக இருக்கலாம். அல்லது குடும்ப விவகாரங்களாக இருக்கலாம். நேரடியாகவோ அல்லது எவர் மூலமாகவோ அது கொடுக்கல் வாங்கல் விவகாரமாக மாறி விடுகிறது. ஹக் மஹர் வழங்கல் அல்லது ஏதாவது பொருள்கள் வழங்கல் கணவன் மனைவி சண்டைகளில் கொடுக்கல் வாங்கல் போன்ற விவகாரங்களில் பொருளாதார விவகாரங்கள் ஏற்படுகின்றன. இவ்வாறு ஒவ்வொரு விவகாரத்திலும் ஏதாவது ஒரு வடிவத்தில் கொடுக்கல் வாங்கல் விவகாரம் Involve ஆகி விடுகிறது. ஏதாவது ஒரு நிலையில் அவகாச காலம் செல்கிறது. கொடுக்கல் வாங்கல் விவகாரங்களிலும் பெரும்பாலும் இன்ன தொகை வேண்டும் என்று முறையீடு செய்யப்படுகிறது. குடும்ப விவகாரங்களில் உதாரணமாக ஹக் மஹரின் தொகை கேட்கப்படுகிறது. நிச்சயமாக இதுவும் கூட கணவனின் பொறுப்பில் உள்ள ஒரு கடன் ஆகும். ஆனால் சில வேளைகளில் பெண் தரப்பினர், பையன் தரப்பினரிடம் அதிக அளவான தொகையை ஹக் மஹராக எழுத வைக்கின்றனர். ஒருவகையில் அந்த பையன் அந்த தொகையைச் செலுத்துவதற்கு ஒரு கடன் போன்று கட்டுப்படுத்தப்படுகிறான். இன்னொரு காரணம் பெண் வீட்டினர் வரம்பு மீறுகின்றனர். பையனை பிணைத்து வைப்பதற்காக அதிக மஹர் தொகையை எழுத வைக்கின்றனர். பையன் தருவதற்கே சிரமமான ஒரு தொகையாக அது இருக்கிறது. மறு தரப்பு அதனை செலுத்துவது சிரமம் என்ன? செலுத்துவதற்கு வாய்ப்பே இல்லை. கஸா, பையனின் சூழ்நிலையைப் பார்த்து ஹக் மஹரைக் குறைத்தால் இதனாலும் மறு தரப்பு ஆட்சேபனை செய்கிறது. அதேபோன்று நேரடியான கொடுக்கல் வாங்கல் விவகாரங்கள் உள்ளன.

கஸா நிலைமைகளைப் பார்த்து தவணை முறையை ஏற்பாடு செய்தால் அதனாலும் மறு தரப்பு ஆட்சேபனை செய்கிறது. நாம் அஹ்மதிகள். ஓர் அமைதி நிறைந்த சமுதாயத்தைப் பற்றி நாம் உலகிற்கு கூறும்போது நாமும் ஒவ்வொரு விவகாரத்திலும் சமுதாயத்தில் அமைதியை நிலைநாட்ட முயற்சி செய்ய வேண்டும். சஹாபாக்கள் ஒருவருக்கொருவர் தமக்கிடையில் உள்ள விவகாரத்தில் சமுதாயத்தில் எவ்வாறு நடந்து கொண்டனர். அதன் ஒரு பொலிவு ஒரு சம்பவத்தில் கிடைக்கிறது.

ஹஸ்ரத் அபூகதாதா (ரலி) அவர்களைப் பற்றி வருகிறது. ஒரு முஸ்லிம் அவர்களிடம் சிறிது கடன் வாங்கி இருந்தார். இவர் எப்போது கடன் வசூலிக்கச் சென்றாலும் அவர் மறைந்து கொள்பவராக இருந்தார். ஒருநாள் இவர் வசூலிக்கச் சென்றபோது அவரது மகன் மூலம் அவர் வீட்டில் இருப்பது தெரிய வந்தது. நீர் வீட்டினுள்தான் இருக்கின்றீர் என்று தெரிந்து விட்டது. எனவே நீர் ஒளிந்து இருப்பது பயனற்றது. எனவே வெளியில் வாரும். என்னிடம் வந்து பேசும் என்று வெளியில் இருந்து சப்தமிட்டார். அம்மனிதர் வெளியில் வந்ததும் ஒளிந்து கொண்டு இருந்ததன் காரணத்தைக் கேட்டார். அவர் கூறினார்: தற்போது நான் மிகவும் வறிய நிலையில் இருக்கிறேன். எனது பொருளாதார நிலை மிகவும் மோசமாக உள்ளது. என்னிடம் எதுவும் இல்லை. அத்துடன் நான் குடும்பஸ்தன். குழந்தைகள் நிறைய இருக்கின்றார்கள். அவர்களின் செலவையும் பார்க்க வேண்டியுள்ளது என்று கூறினார். உடனே அபூகதாதா 'உண்மையாகவே நீர் கூறுவதுபோன்று இதுதான் உமது நிலையா?' என்று கேட்டார்கள். 'இறைவன் மீது ஆணையாக! இதுவே எனது நிலை' என்று அவர் கூறியதும் அன்னார் அவரது எல்லா கடனையும் மன்னித்து விட்டார்கள். (சஹீஹ் முஸ்லிம் கிதாபுல் முஸாகாத் பாபு ∴பஸ்லி இன்ஸாருல் முஅஸ்ஸிர் ஹதீஸ் 4000) இதுவே நம்பிக்கை கொண்ட ஒருவர் மற்றவரிடம் காட்ட வேண்டிய மென்மையான நடை முறையும், அன்பு, நேசம் பரப்பும் நிலையாகும். இதனால் அமைதி பரவும். ஆனால் இதில் கடன் வாங்கியவரின் நிலையும் கூட விளக்கப்பட்டுள்ளது. அவர் பிடிவாதமாகத் தொகையை விழுங்குபவராக இருக்கவில்லை. அவரிடம் கடன் வாங்கிய உணர்வும் வெட்கமும் காணப்பட்டது. கடனைச் செலுத்த முடியவில்லை. எனவே ஒளிந்து கொண்டு திரிந்தார். ஆனால் தரமாட்டேன் என்று கூறவில்லை. இக்காலத்தில் நம்முன் பிரச்சனைகள் வருகின்றன. இதற்கு முற்றிலும் மாற்றமான ஒரு நிலைதான் அதில் காணப்படுகிறது.

கடனை வாங்குகின்றனர். பிறகு நாங்கள் வாங்கவே இல்லை என்று நிரூபிக்க முயற்சி செய்கின்றனர். ஆகவே அமைதி நிறைந்த சமூகம் என்பது இரு தரப்பினரின் நடைமுறையால்தான் உருவாகிறது. கடன் கொடுப்பவர் அல்லது கடன் திருப்பிப் பெற உரிமை பெற்றவர் தரப்பில் அவகாசம் வழங்குவதன் மூலமாகவும் கடனைத் திருப்பிச் செலுத்தும் பொறுப்பில் உள்ளவரிடம் பொறுப்புணர்ச்சி மற்றும் கடன் திருப்பிச் செலுத்த வேண்டும் என்ற கவலை ஏற்படுவதன் மூலமுமே சமுதாயத்தின் அமைதி ஏற்பட முடியும். ஆகவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பைஅத்தின் கீழ் வந்து நாமும் கூட இத்தகைய உணர்வை உருவாக்க வேண்டியது அவசியமாகும்.

கஸா அவகாசம் வழங்கினாலும் சரி, வழங்கா விட்டாலும் சரி, கஸா எவரையும் வழங்குமாறு கட்டுப்படுத்தினாலும் சரி, கட்டுப்படுத்தா விட்டாலும் சரி உரிமையைப் பெறுபவர் மென்மையை வெளிப்படுத்த வேண்டும். உரிமையைத் தருபவருக்கு திருப்பிச் செலுத்துவது பற்றிய தமது உணர்வை வெளிப்படுத்தி அதனை திருப்பித் தருவதற்கு முழுமையான முயற்சியும் செய்ய வேண்டும்.

உரிமையைச் செலுத்தாமல் இருந்து விட்டு பிறகு தட்டிக்கழிப்பது பற்றிய ஒரு சம்பவத்தை ஹஸ்ரத முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: விஷயம் என்னவென்றால், அது ஒரு மனிதரின் இடம் சம்பந்தமான வழக்காக இருந்தது. வாடகைக்கு இருப்பவர் காதியானில் இருந்தார். வாடகைக்கு இருப்பவர் இடத்தைக் காலி செய்யவில்லை. கட்டட உரிமையாளர் காதியானில் வசிக்கவில்லை. இராணுவத்தில் வேலை பார்த்தார். வருடத்தில் சில நாட்களுக்காக மட்டுமே காதியானுக்கு வருவார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் அம்மனிதரிடம் கூறினேன். நீர் இராணுவத்தில் வேலை செய்கிறீர்கள். வருடத்தில் 15–20 நாட்களுக்கு காதியான் வருகிறீர். இத்தனை நாளைக்கு நீர் நமது லங்கர் கானாவில் கூட தங்க முடியும். நமது விருந்தோம்பலின் கீழ் இருக்க முடியும். அல்லது

ஏதாவது ஒரு நண்பரின் வீட்டிலும் தங்க முடியும். இப்போது இங்கு இடப் பற்றாக்குறை உள்ளது. நீங்கள் வாடகைக்கு இருப்பவரை சில நாட்கள் தங்குவதற்காக, வெளியேற்றினால் அவருக்கு மிகவும் கஷ்டமாகி விடும். பிறகு ஓர் உதாரணமும் அதற்கு தந்தார்கள். சஹாபாக்கள் தமது சொத்துக்களையே வழங்கி விட்டனர். நீர் 10–15 நாட்கள் தங்குவதற்காக பதினொன்றரை மாதம் வீட்டில் வசித்து வருபவரை வெளியேற்ற விரும்புகிறீர்.

அன்னார் கூறுகிறார்கள்: இது அவரை மிகவும் தாக்கத்திற்கு உள்ளாக்கியது. அவர் கூறினார். ஹுஸூர் நீங்கள் சரியாகத்தான் சொல்கிறீர்கள். அவரை தொந்தரவு செய்வது எனது தவறுதான். ஆனால் நீங்கள் அந்த வாடகைக்கு இருப்பவரிடம் கேளுங்கள். அவர் கடந்த 8–9 மாதங்களாக வாடகை தரவில்லை. இதனால் இவரை வீட்டில் இருந்து காலி செய்ய நினைத்தேன்.

அப்போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள், உடனே நான் அந்த வீட்டு உரிமையாளரிடம் கூறினேன். இது அறிவுபூர்வ –மானதுதான். உமது தவறு ஒன்றும் இல்லை. இந்த வழக்கைத் தொடுத்தவர் இவ்வளவு காலமாக, தான் வாடகை கொடுக்காததைக் கூறவில்லை என்று கூறினார்கள்.

அன்னார் கூறுகிறார்கள்: அப்போது எனது நிலை மிகவும் கஷ்டமாகி விட்டது. நான் வீட்டு உரிமையாளரின் உள்ளத்தை மென்மைப்படுத்த முயற்சி செய்தேன். ஆனால் அவர் கூறிய வார்த்தைக்கு என்னிடத்தில் எந்த பதிலும் இல்லை. மற்ற தரப்பு வாடகையைச் செலுத்தி இருந்தால் நான் வெற்றி பெற்றிருப்பேன். செய்ய வேண்டிய தீர்பை கூறியிருப்பேன். ஆனால் இவர் வாடகையும் கூட செலுத்தவில்லை. பிறகு வீட்டையும் தன் வசத்தில் வைத்துக் கொள்ள விரும்பி இருந்தார்.

அன்னார் கூறுகிறார்கள்: அப்போது எனது நிலை ஒரு பட்டானின் நிலையாகி விட்டது. அந்த பட்டானிடம் ஒருவர், 'நீர் ஒருவரை கலிமா சொல்ல வைத்தால் சொர்க்கத்திற்குப் போய் விடலாம்' என்று கூறினார். அந்த பட்டான் ஒரு இந்துவைப் பிடித்து கலிமா சொல் என்றார். அந்த இந்து, 'நான் ஒரு இந்து மதத்தைச் சார்ந்தவன். நான் கலிமா சொல்லி எனக்கு என்ன ஆகப் போகிறது?' என்று பதில் கூறினார். உடனே அந்த பட்டான், 'இல்லை. நீ சொல்லத்தான் வேண்டும். இல்லையென்றால், வாளால் உன்னை கொன்று விடுவேன்' என்றார். கடைசியில் அந்த இந்து, 'சரி. எனக்கு கலிமா சொல்லிக் கொடு' என்று கேட்டார். பிறகு அந்த பட்டான், 'நான் சொல்லித் தர மாட்டேன். நீயே சொல்' என்றார். பிறகு அந்த இந்து, 'நான் எப்படி கலிமா கூறுவேன்? கலிமா என்னவென்று எனக்கு என்ன தெரியும்? உமக்கு தெரிந்திருந்தால் நீயே படித்துக் கொடு' என்று பதில் கூறினார். அதற்கு பட்டான், 'எனக்கும் கலிமா தெரியாது. இன்றைக்கு எனக்கு அதிர்ஷ்டம் இல்லை. இருந்திருந்தால் உன்னை கலிமா சொல்ல வைத்து நான் சொர்க்கம் செல்லவிருந்தேன்' என்று கூறினார்.

அன்னார் கூறுகிறார்கள்: நான் போதனை செய்ததில் வீட்டு உரிமையாளரின் உள்ளம் மென்மையாகி விட்டது. அவர் கூறிய வார்த்தையில் எனது கலிமாவும் பட்டானின் கலிமா போன்று ஆகி விட்டது. மறு தரப்பில் உள்ளவர் வாடகையைக் கொடுத்திருந்தால் உரிமையைப் பறிக்காமல் இருந்தால் நான் வீட்டு உரிமையாளருக்கு கலிமா சொல்லித் தந்திருப்பேன். (முஸல்மானோ னே அப்னே கல்பே கே ஸமானா மே அஹ்லாக் கா அ்.லா நமூனா திகாயா. அன்வாருல் உலூம் தொகுதி 18 பக்கம் 201-203)

ஆகவே, முஃமின் ஒருவர் மற்றவரின் உரிமையை வழங்குவதில் சுறுசுறுப்பாக இருக்க வேண்டும். ஒரு சம்பவம் அல்ல. பல சம்பவங்கள் உள்ளன. கஸாவுக்கும் வருகின்றன. அவை காலத்தின் கலீஃபாவிடமும் எடுத்து வைக்கப்படுகின்றன என்றால் அது உண்மையை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும். அது அல்லாமல் காலத்தின் கலீஃபா வெட்கப்பட வேண்டியது வரும். அவரை வெட்கப்படுவதிலிருந்து காப்பாற்ற வேண்டும்.

நான் ஏற்கனவே கூறியதுபோன்று நிறைய விவகாரங்கள் இருக்கின்றன. உரிமையைப் பெற வேண்டியவரை நாம் மென்மைப்படுத்தி விட்டாலும் கூட உரிமையைத் தருபவரின் நடைமுறை மேற்கொண்டு முன் செல்ல விடாமல் நம்மை தடுத்து விடுகிறது. பிறகு எம்மிடம் கருணை காட்டப்படவில்லை என்று இன்னொரு புகார் கூறப்படுகின்றது.

## திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) உமக்கு எதனைப் பற்றிய அறிவு இல்லையோ, அதனைப் பின்பற்றாதீர். (ஏனென்றால்) காது, கண், மனம் இவை எல்லாவற்றையும் குறித்து (உம்மிடம்) விசாரிக்கப்படும். (17:37)

**ஜோதி அஸ்டின்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

எவர்கள் அந்த இறைவன் மீதுள்ள பேரன்பிலும் நேசத்திலும் தங்களை மாய்த்துக் கொள்கின் –றனரோ, மேலும் சுயமே தாங்கள் இருப்பது போன்றே அவனது ஏகத்துவம் மற்றும் கம்பீரம் வெளிப்பட வேண்டும் என்று விரும்புகின்றவர் –களாக இருக்கின்றனரோ அவர்களை தவிர வேறு எவருக்காகவும் இறைவன் தனது மகத்தான அடையாளங்களை வெளிப்படுத்துவதில்லை.....

**மர்ஹூம் சேக் அப்துல் காதிர்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

## திருக்குர்ஆனிலிருந்து...


பூமியில் ஆணவங்கொண்டு நடக்காதீர். ஏனென்றால், இதனால் நாட்டின் எல்லையையும், உம்மால் அடைந்து விட முடியாது. (இவ்வாறு செய்வதனால் சமுதாயத்) தலைவர்களது உயர்ந்த அந்தஸ்தையும் உம்மால் பெற்று விட முடியாது. (17:38)

**அன்னல் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

மேலும் (அல்லாஹ்வின் அடியார்களாகிய) அவர்கள் செலவு செய்யும்போது வீண் விரயம் செய்யவோ, கருமித்தனம் காட்டவோ செய்யாமல் அவ்விரண்டுக்கும் இடையில் நடுநிலையைக் கைக்கொள்வார்கள். (25:68)

**லஜ்னா இமாயில்லாஹ்**
ஆதம்பாக்கம்.

93600 05888
78716 00664
IBR
Construction Materials

எங்களிடம் கட்டடத்திற்கு தேவையான சிமெண்ட், செங்கல், மணல், ஜல்லி, கிராவல், மெட்டல், ஹலோபிலாக் மற்றும் அனைத்து பொருட்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.
சுப்புலட்சுமி நகர், நிர்மலா மாதா ஸ்கூல் ரோடு, குனியமுத்தூர், கோவை–5.

## திருக்குர்ஆனிலிருந்து...

(நிராகரிப்பவர்களிடம்) கூறுவீராக: நீங்கள் பிரார்த்தனை செய்யா விட்டால் என் இறைவன் உங்களைப் பொருட்படுத்தவே மாட்டான். நீங்கள் (இறைத் தூதை) மறுத்து விட்டதால் தண்டனை உங்களைப் பற்றிக் கொள்ளும். (25:78)

**அன்ஸருத்தீன்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, கோயம்புத்தூர்.

## திருக்குர்ஆனிலிருந்து...

உங்களுக்கு ஏதேனும் தீங்கு ஏற்பட்டால் அது உங்கள் கைகள் சம்பாதித்தவற்றி(ன் விளைவி)னாலே ஆகும். அவன் (உங்கள் பாவங்களுள்) அதிகமானவற்றை மன்னிக்கிறான். (42:31)

**S. முஹம்மது இஸ்மாயீல்**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்

## திருக்குர்ஆனிலிருந்து...

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் எல்லாரும் முழுமையான கீழ்படிதலுக்குள் வந்து விடுங்கள். ஷய்த்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்லாதீர்கள். அவன் உண்மையிலேயே உங்களுக்கு (மிகவும்) பகிரங்கமான பகைவனாவான். (2:209)

**A. சம்சுல் ஆலம்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

மனிதன் நல்லதைக் கேட்பவதில் ஒருபோதும் சோர்வடைவதில்லை. ஆனால், அவனுக்கு ஏதேனும் துன்பம் ஏற்பட்டால், அவன் நம்பிக்கை இழந்து சோர்வடைந்து விடுகின்றான். (41:50)

**S.H. வஸீம் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்

அழகிய சமுதாயத்தை உருவாக்குவதற்–காகவும் எவ்வாறு நடைமுறை இருக்க வேண்டும்? இரு தரப்பும் தமது உரிமையை எப்படி செலுத்த வேண்டும்? என்பது சம்பந்தமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சில மேற்கோள்களை எடுத்து வைக்கிறேன். அன்னார் ஒரு சந்தர்ப்பத்தில் இருவருடைய விவகாரத்தில் பரஸ்பரம் மென்மையை உருவாக்குபவருக்கு துஆ வழங்கியவாறு கூறுகிறார்கள்: “விற்கும்போதும் வாங்கும்போதும் கடனைத் திருப்பி செலுத்துமாறு கேட்கும்போதும் எளிதை உருவாக்குபவருக்கு அல்லாஹ் கருணை காட்டுவானாக.” (சஹீஹ் புகாரி கிதாபுல் புயூ.ஃ. பாபுஸ் ஸுஹுலதி வஸ்ஸமாததி .ஃ.பிஸ்ஸர்ரி வல் வய்இ ஹதீஸ் 2076)

பிறகு எளிதை தருபவருக்கு நற்செய்தி வழங்கியவாறும் மற்றவருக்கு அவ்வாறு செய்யுமாறு தூண்டியவாறும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்: “அல்லாஹ் ஒரு மனிதரை சொர்க்கத்திற்கு அனுப்பினான். விற்கும்போதும் வாங்கும் போதும் கடன் கொடுக்கும் போதும் திரும்ப கேட்கும் போதும் எளிதை உருவாக்குபவராக அவர் இருந்தார். இதனால் அவரை அல்லாஹ் சொர்க்கத்தின் நுழைத்தான்.” (சஹீஹ் புகாரி அஹாதீஸுல் அன்பியா பாபு திக்ரி அன் பனீ இஸ்ராயீல் ஹதீஸ் 3451)

பிறகு ஒரு அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “ஒருவர், கஷ்டப்பட்ட கடன்பட்ட ஒருவருக்கு கடன் திருப்பி செலுத்த அவகாசம் வழங்கினார் அல்லது மன்னித்து விட்டார் எனில், அல்லாஹ்வின் நிழலைத் தவிர வேறு நிழல் இல்லாத நாளில் அல்லாஹ் அவருக்கு தனது அரியணையின் கீழ் இடமளிப்பான்.” (சுனன் திர்மிதி அப்வாபுல் புயூ.ஃ. பாபு மா ஜாஅ .ஃ.பீ இன்ஸாரில் உஸ்ரி வர்ரி.ஃ.ப்கி ஹதீஸ் 1308)

பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ் ஒரு மனிதரை மன்னிப்புடன் நடந்து கொண்டது தொடர்பாக கூறினார்கள்: “ஒரு வியாபாரி மக்களுக்கு கடன் வழங்கி வந்தார். அவர் ஏதாவது கஷ்டப்பட்டவரைக் கண்டால், தமது பணியாளரிடம் கண்டும் காணாமல் நடந்து கொள்ளுமாறு கூறுவார். அல்லாஹ்வும் நம்மிடம் அவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்றார்.”

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்: “அவரது அந்த செயலின் காரணமாக அல்லாஹ் அவரை கண்டும் காணாதது போன்று மன்னித்து விட்டான்.” (சஹீஹ் புகாரி கிதாபுல் கிதாபுல் புயூ.ஃ. பாபு மின் அன்ஸருல் முஅஸ்ஸரி ஹதீஸ் 2078)

எனவே எவருக்கு வாய்ப்பு உள்ளதோ அவர் சண்டை சச்சரவு செய்து நீதிமன்றத்தில் தேவையில்லாமல் நேரத்தையும் பணத்தையும் வீணாக்குவதை விடுத்து எந்த அளவுக்கு சாத்தியமோ அந்த அளவுக்கு அவகாசம் வழங்க வேண்டும். கடன் கொடுத்தவருக்கு மட்டும்தான் அவகாசம் வழங்க வேண்டும் என்று இஸ்லாம் கூறவில்லை. இஸ்லாம் எத்தகைய அமைதி நிறைந்த சமுதாயத்தை உருவாக்குகிறது என்றால் ஒவ்வொரு பிரிவுக்கும் அவரது கடமைகளை கவனமூட்டுகிறது. அதன் மூலம் உள்ளத்தின் வெறுப்புகள் அகன்று விடும். அமைதியும் நிலைபெறும். எனவே எவருக்கு திருப்பிச் செலுத்தும் பொறுப்பு உள்ளதோ அவருக்கும் அது அறிவுறுத்துகிறது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஓர் உதாரணம் தந்தார்கள். நிறைய உதாரணங்கள் கண் முன் வருகின்றன. எந்த கட்டாய சூழ்நிலையும் இல்லாமலேயே உரிமையைத் தருவதில் தாமதம் செய்கின்றனர். அத்தகையோருக்கு ஜமாஅத் அமைப்பு ஒருபோதும் ஆதரவு தர முடியாது. அத்தகையோருக்கு ஆதரவு தந்தால் பிறகு உரிமையை விழுங்குபவருக்கு சுதந்திரம் கிடைத்து விடும். அமைதிக்குப் பதில் சமூகத்தில் குழப்பம்தான் உருவாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பைஅத் நிபந்தனைகளுள் இதுவும் ஒரு நிபந்தனையாகும். ‘குழப்பத்திலிருந்து தப்பிப்பதற்கு முயற்சி செய்வேன்’ என்பதாகும். (இஸாலே அவ்ஹாம். ரூஹானீ கஸாயின் தொகுதி 3 பக்கம் 564) இந்த வகையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இது குறித்து நமக்கு வழிகாட்டல் வழங்கியுள்ளார்கள். ஒரு அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “செல்வந்தர் தமது கடனை திருப்பிச் செலுத்தாமல் தட்டிக்கழிப்பது அநீதியாகும். உங்களிடம் இவ்வாறு தட்டிக்கழிப்பவரின் பின் செல்வதற்கு கூறப்பட்டால் அவர் அவரைப் பின்தொடர்ந்து சென்று அதனை செலுத்த வைக்க வேண்டும்.” (சஹீஹ் புகாரி கிதாபுல் ஹவாலாத் பாபுல் ஹவாலத் ஹல் யர்ஜிஉ .ஃ.பில் ஹவாலதி? ஹதீஸ் 2287) இங்கு எந்த மென்மையும் இல்லை. எந்த அவகாசம் தரவும் அவசியமில்லை. ஏனெனில் அவருக்கு திருப்பிச் செலுத்த வசதி இருக்கிறது. நான் ஏற்கனவே கூறியது போன்று இவ்வாறு செய்யா விட்டால் உரிமையை விழுங்குபவருக்கு துணிச்சல் பிறந்து விடும்.

பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓரிடத்தில் கூறினார்கள்: “கடன் திருப்பிச் செலுத்த வேண்டியவர் தட்டிக்கழித்து வந்தால் அவருக்கு கண்ணியக்குறைவு ஏற்படுவதும் அவருக்கு தண்டனை வழங்குவதும் அனுமதிக்கப்பட்டதாகி விடுகிறது.” (சுனன் அபூதாவூது கிதாபுல் அக்ஸியா பாபு .ஃ.பித்தய்னி ஹல் யஹ்பஸு ஹதீஸ் 3628)

எனவே, அத்தகைய உரிமையைப் பறிக்கும் ஒருவருக்கு தண்டனை தருவது ஜமாஅத் அமைப்பின் கடமையாகும். அவர்கள் ஒத்துழைக்காமலும், கஸாவின் தீர்ப்பிற்கேற்ப செயல்படாமலும் இருப்பவருக்கும், உரிமையைப் பறிப்பவருக்கும் தண்டனை கிடைத்தால் பிறகு எம்மீது மென்மை காட்டப்படவில்லை என்று அவர்கள் கூச்சலிடக் கூடாது. அல்லாஹ்வின் ரஸூல், அவர்களுக்கு தண்டனை வழங்க ஜமாஅத் அமைப்பிற்கு உரிமை வழங்கியுள்ளார்கள். நாட்டின் சட்டமும் கூட அத்தகையோருக்கு தண்டனை தான் தருகிறது.

பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய பயமுறுத்தத்தக்க கடும் எச்சரிக்கையாகும். இதனை அன்னார் உரிமையைத் திருப்பிச் செலுத்தாதவரைப் பார்த்து கூறுகிறார்கள்: “ஒருவர் திருப்பிச் செலுத்தும் எண்ணத்தில் ஒரு பொருளை வாங்கினார் அல்லது கடன் வாங்கினார் எனில் அல்லாஹ் அவரை அதனை திருப்பிச் செலுத்த வைப்பான். எவர் பொருளை அபகரிக்கவும், உரிமையை விழுங்கவும் செய்யும் எண்ணத்தில் கடன் வாங்கினாரோ அல்லாஹ் அவரை அழித்து விடுவான்.” (சஹீஹ் புகாரி கிதாபு .ஃ.பில் இஹ்திராஸி வ அதாவுத் துயூனி பாபு மன் அஹாஸ அம்வாலுன்னாஸி யுரீது அதாஅஹா அவ் இத்லா.ஃ.பிஹா ஹதீஸ் 2387) எனவே நிய்யத் நேர்மையானதாக இருந்தால் அல்லாஹ் அதற்கான வசதிகளையும் வாய்ப்புகளையும் உருவாக்கித் தருகிறான். அல்லது கடன் தந்தவரின் உள்ளத்தில் மென்மையினை ஏற்படுத்துகிறான். ஆனால் ஒருவரின் நிய்யத்தே நல்லதாக இல்லையென்றால் பிறகு அல்லாஹ்வும் அவருக்கு தண்டனை தருகிறான்.

ஒருவருக்கு கடனும் இருந்து அவரது சொத்துக்களும், தொகையும் அதனை திருப்பிச் செலுத்த போதுமானதாக இல்லையெனில் அத்தகையவரின் ஜனாஸாவை பொதுவாகவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுததில்லை. (சஹீஹ் புகாரி கிதாபுல் ஹவாலாத் பாபு அன் அஹால தய்னில் மய்யிதி அலா ரஜுலி ஜாஸ் ஹதீஸ் 2289) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கடனிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்காக துஆவும் செய்தார்கள். இன்னும்

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*என் கையில் ஒரு தீபம் உள்ளது. என்னிடம் வருபவர் அவ்வொளியிலிருந்து நிச்சயம் ஒளி பெறுவர். ஆனால் தவறான எண்ணத்தாலும் தீய யூகத்தாலும் விலகி ஓடுபவன் இருளில் எறியப்படுவான். இக்காலத்தின் உறுதி வாய்ந்த கோட்டை நானே....*

**மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா**
**ஆதம்பாக்கம்**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*திருக்குர்ஆனின் முக்கிய போதனைகளை இரு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று, ஓரிறைக் கொள்கை, இறை அன்பும், இறைவனுக்கு கட்டுப்படுதலும் ஆகும். மற்றொன்று தன் உடன்பிறப்புகளுக்கும் அயலாருக்கும் இரக்கம் காட்டுதல் ஆகும்.*

**மர்ஹூம் A.M. செய்யது அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*உறுதியாக அறிந்து கொள்க. கண்ணின்றி காண முடியாதது போன்று, காதின்றி கேட்க முடியாதது போன்று நாவின்றி பேச முடியாதது போன்று திருக்குர்ஆனின் உதவியின்றி அந்த அன்பிற்குரிய இறைவனின் முகத்தைப் பார்க்க இயலாது.*

**M.Y. கன்சுல் ஆயிஷா**
சதர் லஜ்னா இமாயில்லாஹ், உடன்குடி.

சொல்வதாயின், அன்னார் கடனை குஃப்ர் உடன் சேர்த்துள்ளார்கள். இந்த வகையில் ஓர் அறிவிப்பில் ஒரு சஹாபி கூறுகிறார்: ''நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை, 'நான் குஃப்ர் மற்றும் கடனிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறேன்' என்று கூறக் கேட்டேன்.''

ஒரு மனிதர், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! கடன் விவகாரம் குஃப்ர் –க்கு சமமாகவா கருதப்படும்? என்று கேட்டார். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'ஆம்' என்று கூறினார்கள். (சுனன் நஸயீ கிதாபுல் இஹ்திஹாரதீ பாபுல் இஸ்திஹாரதீ மினத்தய்னி ஹதீஸ் 5475)

இது சம்பந்தமாக இன்னும் விளக்கங்களை ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் அறிவிப்பிலிருந்து கிடைக்கிறது. அன்னார் கூறுகிறார்கள்: ''ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுகையில், 'அல்லாஹ்வே! நான் பாவங்கள் மற்றும் கடனிலிருந்து உனது பாதுகாப்பைத் தேடுகிறேன்' என்று துஆ செய்து வந்தார்கள்.''

அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அல்லாஹ்விடம் தாங்கள் எவ்வளவு அதிகமாக ஏன் கடனிலிருந்து பாதுகாப்புத் தேடுகிறீர்கள்? என்று ஒருவர் கேட்டார். அதற்கு உடனே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''ஒரு மனிதர் கடன்பட்டு விட்டால், பேசும்போது பொய் சொல்கிறார். வாக்குறுதி கொடுத்து விட்டு மாறி விடுகிறார்.'' (ஸஹீஹ் புகாரி கிதாபுல் அதான் பாபுத் துஆயி கப்லஸ்ஸலாம்) எனவே இக்காரணத்தால்தான் பாதுகாப்புத் தேட வேண்டும். கடன் வாங்குபவர் முடிந்தவரை நேரடியாக அதிலிருந்து தப்பிக்க வேண்டும். வாங்கி விட்டால் பிறகு அதுபற்றி கவலைப்படவும் வேண்டும். உரிமைகளை வழங்குவதும் கடனைத் திருப்பித் தருவது போன்றதேயோகும். எனவே அதன் பக்கமும் எச்சரிக்கையுடன் கவனம் செலுத்த வேண்டும்.

கஸாவின் தீர்ப்பிற்குப் பிறகு உரிமைகளை கடன்களை மன்னிக்க வைக்க விரும்பினால் பிறகு எதிர் தரப்பிடம்தான் மன்னிக்க வைக்க வேண்டும். உரிமைகளை தந்தவர்தான் மன்னிக்கவும் முடியும் அல்லது அவகாசம் தர முடியும். எனவே ஜமாஅத் மக்கள் இதன் பக்கம் அதிகமாக கவனம் செலுத்துவது அவசியமாகும்.

கடன் திருப்பித் தருவதில் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் ஒரு வழிமுறையைக் கூறுகிறார்கள்: அதிகமானவர்கள் எழுதுகின்றனர். கடன்பட்டவர் இதனை செயல்படுத்திப் பாருங்கள். ஒன்று, அதிகமாக இஸ்திக்ஃபார் செய்ய வேண்டும். இரண்டாவது வீணான செலவுகளை விட்டு விட வேண்டும். பெரும்பாலான கடன்களை மக்கள் அனாவசியமான செலவுகளை செய்வதற்காகவே வாங்குகின்றனர். ஆசைகளை அதிமாக்கிக் கொள்கின்றனர். மூன்றாவதாக, ஒரு பைசா கிடைத்தாலும் கடன் தந்தவருக்கு கொடுத்து விட வேண்டும். (பத்ர் தொகுதி 11 பக்கம் 3; 9 நவம்பர் 1911 எண்.2-3 )

சிறு சிறு தொகையைாக எங்கிருந்து உங்களிடம் வந்தாலும் எந்த அளவுக்கு உங்கள் செலவுகள் போக செலுத்த முடியுமோ செலுத்துவதில் கவனம் செலுத்துங்கள். செலுத்திக் கொண்டே செல்லுங்கள். எவ்வாறிருப்பினும் ஒரு கவலை இருக்க வேண்டும். சின்னஞ்சிறு தொகை மிஞ்சினாலும் அதனை செலுத்த வேண்டும். உங்களை கஷ்டத்தில் இட்டுக் கொண்டு மிச்சப்படுத்த வேண்டும். அதனை கடனை செலுத்தப் பயன்படுத்த வேண்டும். சிலர் அனாவசிய செலவுகளுக்காக ஆர்வத்தில் கடன் வாங்கி விடுகின்றனர். பெரிய பெரிய கார்களை வாங்குகின்றனர்.

ஒருவர் எனக்கு எழுதியுள்ளார். என்னிடம் ஒரு கார் இருக்கிறதுதான். ஆனால் எனக்கு இன்ன கார் ரொம்ப பிடிக்கும். பைசா இல்லை. வங்கியில் கடன் வாங்கி கார் வாங்கலாமா? என்று கேட்கின்றனர். மனிதன் ஒருமுறை கடன் வாங்கி விட்டால் பிறகு அதிலேயே பிடிபட்டு விடுகின்றான். ஆகவே இந்த அனாவசியமான விருப்பங்களில் இருந்து விலக வேண்டும். அதுபோன்று இன்னும் சிலர், இளைஞர்கள் அனுபவமில்லாமல் தொழில் தொடங்கி விடுகின்றனர். தொழிலின் பெயரால் மக்களிடம் பணத்தை வாங்குகிறார்கள். அனுபவம் இல்லாததால் பணம் எல்லாம் போய் விட்டது. தானே தேவை உடையவராகி விட்டார். மக்களின் பணமும் அதில் மூழ்கி விட்டது. அத்தகையவர்களும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். கொடுப்பவர்களும் கூட கொடுத்து விட்டு புகார் கூறுவதற்கும் வழக்கு தொடுப்பதற்கும் பதிலாக கொடுக்கும் முன் சிந்தித்து கடன் கொடுக்க வேண்டும். அல்லது தொழிலில் பணம் போடுவதாயினும் சிந்தித்துச் செய்ய வேண்டும்.

ஏனெனில் தமது பணமும் மூழ்கி விடுகிறது. அடுத்து கடன் தந்த அப்பாவியின் பணமும் மூழ்கி விடுகின்றது. சிலரை அப்பாவி என்று கூற முடியாது. தீய செயல்களைச் செய்கின்றனர். சிலரது எண்ணமே நல்லதாக இருப்பதில்லை. பிறகு இழிவுக்கு அவமானத்திற்கும் ஆளாகின்றனர்.

எவ்வாறிருப்பினும் இதுபோன்ற காரியங்களிலிருந்து தப்பிக்க வேண்டும். அமைதி நிறைந்த சமுதாயம் நமக்குள் உருவாக வேண்டும். அல்லாஹ் நமக்கு நமது வாழ்வில் ஓர் உண்மையான முஃமினின் சாயலை உருவாக்கும் வாய்ப்பை வழங்குவானாக. ஓர் அமைதி நிறைந்த சமுதாயத்தை நாம் உருவாக்குவோமாக. நல்லொழுக்கத்தின் உயர் தகுதியை எதனை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் எதிர்பார்க்கிறார்களோ எது திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளதோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கவனமூட்டியுள்ளார்களோ அதனை நாம் நம்மிடம் கொண்டு வருவோமாக.

★ ★ ★ ★ ★


**Classic Mobile's & Watch, Hiba watch & Mobiles**
Poyampalayam, P.N. Road,
Tiruppur.
Ph: 95666 47717

**S. MABU**
87541 71700
81240 22479
90955 89992
78719 66352
STAR ORGANIC
TERRACE GARDEN DIVISION
- Panchagavya
- Pest Repeller
- See Veed Extract
- All kinds of garden tools
Email: Starorganicmabu@gmail.com
THARPOLIN + POULTRY
EQUIPMENTS SALES
TIRUNELVELI DIST.

halal Grill house
multi cuisine family restaurant
Thennampalayam, Near 'Centi Win' Company,
Palladam Road, Tirupur.
Ph : 8220 690 222, 8220 691 222


**திருக்குர்ஆனிலிருந்து...**

உம்முடைய இறைவன், தான் விரும்புபவருக்கு உணவைத் தாராளமாக வழங்குகின்றான். மேலும், (தான் விரும்புபவருக்கு அவற்றைக்) குறைவாகக் கொடுக்கின்றான். நிச்சயமாக, அவன் தன் அடியார்களை நன்கு அறிந்து கொள்பவனும், நன்கு பார்ப்பவனும் ஆவான். (17:31)


**முஹம்மது ஆதில்**
சத்ர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், சூலூர்.


**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

இறைவன் உங்களை வீணாக்கி விடுவான் என நீங்கள் ஒருபோதும் கருத வேண்டாம். நீங்கள் உண்மையில் இறைவன் தன் கரத்தினால் மண்ணில் விதைத்த விதையே. இறைவனின் இந்த விதை முளைக்கும்; பூக்கும்.... பின்னர் வலுவானதொரு மரமாகி விடும் என்று கூறியுள்ளான்.


**அட்வகேட் ஸலீம் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.


**திருக்குர்ஆனிலிருந்து...**

நீங்கள் அளந்து கொடுக்கும் போது, அளவை முழுமையாகக் கொடுங்கள். (நீங்கள் நிறுத்துக் கொடுத்தாலும்) சரியான தராசு கொண்டு நிறுத்துக் கொடுங்கள். இவ்வாறு செய்வது மிக்க நல்லதும், முடிவைப் பொருத்தவரை மிகச் சிறந்ததுமாகும். (17:36)


**M.Y. ஷாஹுல் ஹமீது**
மற்றும் குடும்பத்தினர், திருச்சி.

**ALIF AUTO CARE**
Pudupet, Chennai.
Ph: 98847 74525

**CITY HARDWARE STORE'S**
Chrompet, Chennai - 600 044.
Ph : 044-22655219

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

நபி இறைவனின் வடிவத்தைப் பார்ப்பதற்கான கண்ணாடியாக இருக்கின்றார். இந்த கண்ணாடியின் மூலமாக இறைவனின் முகம் தென்படுகின்றது.

**மர்ஹூம் A.N.A. ஹா:.பிஸ்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

திருக்குர்ஆனிலிருந்து...

இவ்வுலக வாழ்க்கையிலும், சாட்சிகள் எழுந்து நிற்கும் நாளிலும் நிச்சயமாக நாம் தூதர்களுக்கும் நம்பிக்கை கொண்டவர்களுக்கும் உதவி செய்வோம். (40:52)

**மர்ஹூமா இலாஹி ஜைனப் கனி**
மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) உமக்கு எதனைப் பற்றிய அறிவு இல்லையோ, அதனைப் பின்பற்றாதீர். (ஏனென்றால்) காது, கண், மனம் இவை எல்லாவற்றையும் குறித்து (உம்மிடம்) விசாரிக்கப்படும். (17:37)

**ஜோதி அஸ்டின்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

உறுதியாக அறிந்து கொள்க. கண்ணின்றி காண முடியாதது போன்று, காதின்றி கேட்க முடியாதது போன்று நாவின்றி பேச முடியாதது போன்று திருக்குர்ஆனின் உதவியின்றி அந்த அன்பிற்குரிய இறைவனின் முகத்தைப் பார்க்க இயலாது.

**ஜலாலுத்தீன்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், தூத்துக்குடி.

0422-2399980, 4351980
emial: metrozonesince1980@gmail.com
web: www.metrozoneonline.com

**Metro Zone**
WATCH, MOBILES & ELECTRONICS
SALES & SERVICE



**276, N.H. Road, Coimbatore - 641 001.**

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

**O.A.N. DOORS & STEELS**



All Types of wooden Doors, Skin Doors Steal Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

திருக்குர்ஆனிலிருந்து...

தொழுகையை நிலைநாட்டுங்கள். ஸக்காத்தைக் கொடுங்கள். நீங்கள் உங்களுக்காக முன் கூட்டியே அனுப்பும் நன்மையையே நீங்கள் அல்லாஹ்விடம் பெற்றுக் கொள்வீர்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்கள் செயல்களைப் பார்ப்பவனாவான். (2:111)

**முஹம்மது ஹுஸைன்**
பழனி

Q4Q

**Bamboo Village**
MULTI CUISINE RESTAURANT

Village Jn. Cherani, Manjeri, Malappuram Dt., Kerala
✆ 0483 276 77 96, 7592 911 164, 9048 774 811
9605 993 444, 9605 995 222
Email : www.q4qcaterers.com

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

எவர்கள் அந்த இறைவன் மீதுள்ள பேரன்பிலும் நேசத்திலும் தங்களை மாய்த்துக் கொள்கின்-றனரோ, மேலும் சுயமே தாங்கள் இருப்பது போன்றே அவனது ஏகத்துவம் மற்றும் கம்பீரம் வெளிப்பட வேண்டும் என்று விரும்புகின்றவர்-களாக இருக்கின்றனரோ அவர்களை தவிர வேறு எவருக்காகவும் இறைவன் தனது மகத்தான அடையாளங்களை வெளிப்படுத்துவதில்லை.....

**மர்ஹூம் சேக் அப்துல் காதிர்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

A.M. Zakir Hussain
✆ +91 98429 41237

***METAPLAST***
DEALERS IN ALL KIND OF PLASTIC RAW MATERIAL & SCRAP

# 70-A, M.S. Nagar, Kurichi Pirivu,
Podanur Main Road, Coimbatore - 641023.
Ph : +91 422-2411124 Mob : 9364218000
Email : zakir@yahoo.com

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

வானத்தில் இறைவன் உங்கள் மீது திருப்தி கொள்ள வேண்டுமென்று எண்ணினால் நீங்கள் ஒருவருக்கொருவர் ஒரே வயிற்றில் பிறந்த இரு சகோதரர்களைப் போல் ஆகிவிடுங்கள்.

**மர்ஹூம் T. அப்துர் ரஹ்மான்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

**ரஹ்மானியா**
மேல்நிலைப் பள்ளி
தொடக்கப் பள்ளி
மெட்ரிகுலேஷன் பள்ளி
மேலப்பாளையம், திருநெல்வேலி.

**S.S. அஸன் அபூபக்கர்**
✆ 94869 37769

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஓரிறைக் கொள்கை ஓர் ஒளியாகும். அது அகத்திலும் புறத்திலும் உள்ள பொய்க் கடவுள்களை மறுப்பதன் பின் உள்ளத்தில் உருவாகிறது. பின்னர் அது மனித உடலின் ஒவ்வொரு அணுவிலும் பரவி விடுகிறது. எனவே இதனை அல்லாஹ் மற்றும் அவனின் தூதர் மூலமேயன்றி மனித ஆற்றல்களால் எவ்வாறு பெற முடியும்?

**S.A. அப்துல் ஹக்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், ஆதம்பாக்கம்.

திருக்குர்ஆனிலிருந்து...

எங்கள் இறைவன் அல்லாஹ் எனக் கூறி, இக்கொள்கையில் நிலைத்திருப்பவர்-களிடம், நீங்கள் அஞ்சவும் வேண்டாம்; கவலையடையவும் வேண்டாம். உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட சொர்க்கத்தைப் பற்றிய நற்செய்திகளை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று (கூறியவாறு) வானவர்கள் இறங்குவர். (41:31)

**மர்ஹூம் முஹம்மது ஸாலிஹ்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

திருக்குர்ஆனிலிருந்து...

பூமியில் ஆணவங்கொண்டு நடக்காதீர். ஏனென்றால், இதனால் நாட்டின் எல்லையையும், உம்மால் அடைந்து விட முடியாது. (இவ்வாறு செய்வதனால் சமுதாயத்) தலைவர்களது உயர்ந்த அந்தஸ்தையும் உம்மால் பெற்று விட முடியாது. (17:38)

**அன்னல் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

முஸ்லிம், கிறித்தவர், இந்து, ஆரியர் ஆகிய எல்லாருக்கும் நான் ஒன்றைத் தெளிவுபடுத்துகிறேன். உலகில் எவரும் எனக்குப் பகைவர் இல்லை. பாசமிக்க தாய் ஒருத்தி தன் குழந்தைகளை நேசிப்பதை விட மிகுதியாக மனிதயினத்தை நான் நேசிக்கிறேன்....

**மர்ஹூமா நதீரா பேகம்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

M. Abdul Raoof
✆ +91 9362 2272 29

**SUCCESS INDIA**
PROMOTERS

Coimbatore, Tamil Nadu
Mob : +91 9363 2272 27
Email: successraoof@gmail.com

# ஒரே அமர்வில் மூன்று தலாக் கொடுப்பது தொடர்பாக ஷரீஅத் கூறுவது என்ன? மற்றும் பெண்களின் உரிமைகள்

❖ ❖ ❖ மன்சூர் அஹ்மது மஸ்ரூர் (ஆசிரியர், பத்ர் வார இதழ் - உருது பதிப்பு) ❖ ❖ ❖

***(பாகம் – 2)***

கடந்த இதழில் நாம் முத்தலாக் தொடர்பாக ஹன.ஃபிகளும் அவர்களுக்கு எதிரில் ஏனைய அறிஞர்கள் கூறியிருந்த கருத்துக்களையும் எடுத்துக் கூறியிருந்தோம். தலாக் கொடுப்பது தொடர்பான இஸ்லாமிய வழிமுறை என்ன? என்பதைப் பற்றியும் சுருக்கமாக எடுத்துக் கூறி இருந்தோம். இது தொடர்பாக மேலும நாம் கூறிக் கொள்வது என்னவென்றால், உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் எல்லா விதமான பித்அத்துகளையும் மற்றும் சடங்கு சம்பிரதாயங்களையும் கடுமையாக எதிர்க்கின்றது.

தலாக் தொடர்பான சரியான இஸ்லாமிய போதனை இதுவாகும். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ∴பிக்ஹா (மார்க்கச் சட்டம்) -வின் நூலான "∴பிக்ஹா அஹ்மதிய்யா பெர்ஸனல் லா" -வின் 78 -வது பக்கத்தில் இவ்வாறு எழுதப்பட்டிருக்-கின்றது "∴பிக்ஹா அஹ்மதிய்யா ஒரே அமர்வில் மூன்று தலாக்குகளைப் பயன்படுத்துவது மற்றும் அதனால் ஏற்படும் தாக்கத்தை ஏற்றுக் கொள்வதில்லை. மேலும் எந்த விஷயத்தை ஷரீஅத்தானது மூன்று முறை செய்வதுடன் தொடர்புபடுத்திக் கூறியிருக்கின்றதோ அவை மூன்று வெவ்வேறு சந்தர்ப்பங்களாகத்தான் இருக்க வேண்டும் என்ற இந்த விஷயத்தில் அது அழுத்தம் காட்டுகின்றது. அதனை வலியுறுத்திக் கூறுகிறது. இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ரூகானா பின் அப்து யஸீது (ரலி) அவர்கள் தனது மனைவிக்கு மூன்று தலாக்குகளைக் கொடுத்திருந்தார். பிறகு தனது இந்த செயலை எண்ணி மிகவும் வெட்கப்பட்டார். அறிவிப்பாளர் கூறுகின்றார். பெருமானார் (ஸல்) அவர்கள், அவரிடம் நீங்கள் எவ்வாறு தலாக் கொடுத்தீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு ரூகானா (ரலி) அவர்கள் நான் மூன்று தலாக்கு-களைக் கொடுத்தேன் என்று கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள், நீங்கள் ஒரே அமர்வில் ஒரு சபையில் மூன்று தலாக்குகளைக் கொடுத்தீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், ஆம்; என்று பதில் கூறினார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், "இது ஒரு தலாக் ஆகவே இருக்கும். நீங்கள் விரும்பினால் (உங்கள் மனைவியிடத்தில்) திரும்பலாம்" என்று கூறினார்கள். (முஸ்னது அஹ்மது தொகுதி 4 பக்கம் 215 மூஸதுர்ரிஸாலா பைரூத் ∴பிக்ஹா அஹ்மதிய்யா பெர்ஸனல் லா பக்கம் 80)

மேலும் நபிமொழியில் இவ்வாறு வருகின்றது: ஒரு நபர் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அவர் தனது மனைவிக்கு ஒரே அமர்வில் மூன்று தலாக்குகள் கொடுத்து விட்டார் என்று கூறப்பட்டது. அதைக் கேட்ட பெருமானார் (ஸல்) அவர்கள் மிகவும் வெறுப்-படைந்தார்கள். மேலும் أَيُلْعَبُ بِكِتَابِ اللّٰهِ وَأَنَا بَيْنَ أَظْهُرِكُمْ நான் உங்கள் மத்தியில் இருக்கும் நிலையில் அவர் இறைவனின் வேதத்துடன் விளையாடுகிறாரா என்ன? என்று கேட்டார்கள். (சுனன் நஸயீ கிதாபுத் தலாக் பாபுஸ் ஸலாஸில் ஜுமுஅதி வமா ∴பிஹி மினத் த∴தீது)

தலாக் தொடர்பாக இந்த ஆட்சேபனையும் மிகவும் வலுவாக எழுப்பப்படுகின்றது. அதாவது திருமண சமயத்தில் ஆண், பெண் ஆகிய இருவரிடமும் அவர்கள் இந்த திருமணத்திற்கு சம்மதம் தெரிவிக்கின்றார்களா? என்று கேட்கப்-படுகின்றது. ஆனால் தலாக் சமயத்தில் அதில் பெண்ணுக்கு சம்மதம் இருக்கின்றதா? என்று ஏன் கேட்பதில்லை? ஆண் கூறியிருப்பதை மட்டும் வைத்து அந்த தலாக் ஏன் ஏற்றுக் கொள்ளப்-படுகின்றது? என்று ஆட்சேபனை செய்யப்படு -கின்றது. இதற்கான பதில் என்னவென்றால், முதலில் இஸ்லாம் ஆண், பெண் ஆகிய இருவருக்கும் பரஸ்பரம் அவர்களில் ஒருவர் மற்றவரை விட்டுப் பிரிந்து செல்வதற்கான முழு உரிமையையும் வழங்கி இருக்கின்றது. இவ்வாறே பெண்ணுக்கும் கூட 'குலா' -வின் மூலம் கணவரை விட்டுப் பிரிந்து செல்வதற்கான உரிமை இருக்கின்றது. அப்போது அதில் ஆணின் சம்மதத்தைப் பெற வேண்டும் என்ற அவசியமில்லை. அசல் விஷயம் என்னவென்றால், இந்துக்களின் பெர்ஸனல் லாவில் பல தடுமாற்றங்களுக்கு ஆளான பிறகு அவர்கள் தலாக் கொடுப்பதை ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். ஆனால், அதற்கான சம்மதத்தை கணவன் மனைவி ஆகிய இருவரிடம் இருந்தும் பெற வேண்டும் என்ற நிபந்தனையை அவர்கள் வைத்திருந்ததால் தலாக்கிற்கு செயல் வடிவம் கொடுக்க முடியாத நிலை இருக்கின்றது. இதன் விளைவாக கணவனும், மனைவியும், அவர்களது குடும்பத்தினரும் கடுமையாக நடந்து கொள்வது, கொலை செய்து அநீதியிழைப்பது போன்ற செயல்களைச் செய்ய ஆரம்பிக்கின்றனர். ஒரு பெண்ணிடமிருந்து இரட்சிப்பு கிடைக்க வேண்டும் என்பதற்காக அந்த கணவரை மரணத்தின் படுகுழியில் தள்ளி விடுகின்றனர். அல்லது ஆண் தகாத முறையில் இன்னொரு பெண்ணை தன்னுடன் வைத்துக் கொள்கின்றார். திருமணம் செய்து கொள்ளாத நிலையில் அவர்கள் இருவரும ஒன்றாக வாழ்கின்றனர். அதன் காரணமாக பெண்களுகான உரிமைகள் நிர்ணயிக்கப்படாமல் இருக்கினறது. அந்த பெண்கள் பிள்ளைகளைப் பெற்றெடுக்கின்றனர். ஆனால், அத்தகைய பெண்கள் அவர்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமைகளில் இருந்து விலக்கி வைக்கப்படுகின்றனர். இது எல்லா கிராமங்களின் மற்றும் நகரங்களின் கதையாக ஆகி விட்டது.

இப்படிப்பட்ட இழிவான நிலைமைகளிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே தலாக் கொடுப்பதற்கு கணவன் மனைவி ஆகிய இருவரது சம்மதமும் தேவை என்ற நிபந்தனையை இஸ்லாம் ஏற்றுக் கொள்ளவில்லை.

இரண்டாவதாக, தலாக் கொடுப்பதறகு மனைவியிடம் கேட்க வேண்டியது கட்டாயமானது அல்ல என்பது சரிதான். ஆனால், மனைவியிடம் இது பற்றி கேட்பதிலிருந்து மற்றும் அவரிடம் பேசுவதிலிருந்து அவர்கள் இருவரும் தங்களுக்கு இடையில் ஆலோசனை செய்வது ஒருவர் மற்றவரைப் புரிந்து கொள்வதற்கு முயற்சி செய்வது போன்ற விஷயங்களை ஷரீஅத் தடை செய்யவில்லை என்பதும் உண்மையாகும். மாறாக இது ஒரு நல்ல விஷயமாகும். இது தொடர்பாக மனைவியிடம் பேசுவதை ஷரீஅத் தடை செய்கின்றது என்பதை எவரும் நிரூபிக்க முடியாது.

தலாக் கொடுப்பதற்கு மனைவியிடம் அது பற்றி கேட்பது கட்டாயமானதாக இருக்க வேண்டும் என்பதை சிறிது காலம் வரை நாம் ஏற்றுக் கொள்வதாக இருந்தாலும் அதன் விளைவாக நாம் கேட்டதற்கு மனைவியின் தரப்பிலிருந்து இரண்டு பதில்களைத்தான் அவர்கள் கூற முடியும். முதல் பதில், தனக்கு தலாக் கொடுக்கப்படுவதை அவர் விரும்பவில்லை என்பதாகும் அல்லது அவரும் தலாக் கொடுக்கப்பட்டு தனியாகப் பிரிந்து செல்வதை விரும்புகின்றார் என்பதாகும். இரண்டாவது பதிலைப் பொறுத்த வரையில் அதில் எவருக்கும் எந்த ஆட்சேபனையும் இருக்க முடியாது. ஆனால், முதல் பதிலைப் பொறுத்த வரையில் அதாவது மனைவி கணவரை விட்டுப் பிரிந்து செல்வதை விரும்பாத நிலையில் அதன் காரணமாக ஒரு ஆணுக்கு என்ன நிகழ்ந்தாலும் சரி. அவர் அதே பெண்ணுடன்தான் வாழ்க்கையை கழிக்க வேண்டும். இந்த விஷயம் மன ரீதியாக ஆணுக்கு எந்த அளவு துன்பத்தை தரக்கூடியதாக இருந்தாலும் அவரது மனைவி அவரை விட்டு பிரிந்து செல்ல விரும்பாததால் அவருடன்தான் அந்த கணவர் வாழ வேண்டும் என்று நாம் தீர்வு கூற முடியுமா? அத்தகைய அநீதியான ஒரு தீர்ப்பை உலகிலுள்ள எந்த நீதிமன்றத்தாலும் வழங்க முடியாது என்பது தெளிவான விஷயம் ஆகும். இதிலிருந்து ஆண், பெண்ணிடமிருந்து தனியாகப் பிரிந்து செல்ல விரும்பினால் அவ்விஷயத்தில் பெண்ணுக்கு சம்மதம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவர் அந்த பெண்ணை விட்டுப் பிரிந்து செல்வதற்கான உரிமை அவருக்கு கிடைக்க வேண்டும் என்பது தெரிய வருகின்றது. இந்நிலையில் கேட்பதனால் மட்டும் என்ன பயன் கிடைக்கப் போகின்றது? எனவே, இஸ்லாம் தலாக் கொடுப்பதற்கு அது பற்றி பெண்ணிடம் கேட்க வேண்டும் என்பதை கட்டாயமானதாக ஆக்கவில்லை. அதே சமயத்தில் அதுபற்றி கேட்பதை அது தடுக்கவும் இல்லை. எனினும், தேவையான விஷயம்

என்னவென்றால், தலாக் கொடுக்கப்படுகின்ற நிலையில் ஆண் தலாக் கொடுப்பதில் உண்மையான முறையில் செயல்படுகின்றாரோ இல்லையோ இவ்விஷயத்தில் அவர் அநீதியாக நடக்கின்றார் என்பதை நீதிமன்றம் ஆய்வு செய்ய வேண்டும். எல்லா அம்சங்களையும் கவனமாக பார்த்து பெண்ணுக்குக் கிடைக்க வேண்டிய எல்லா உரிமைகளையும் பெற்றுத் தர வேண்டியது நீதிமன்றத்தின் பணியாகும். எனவே, அசல் முக்கியத்துவம் பெண்களுக்குரிய உரிமைகளைப் பெற்றுத் தருவதேயாகும். அது அல்லாமல் இவ்விஷயத்தில் அந்த பெண்ணின் விருப்பத்தை மட்டும் கேட்பதினால் எதுவும் நடக்காது.

தலாக் கொடுக்கப்படும் நிலையில் இஸ்லாம் பெண்ணின் உரிமைகளை முழுமையாகக் கருத்தில் கொண்டவாறு அவளுடன் நல்ல முறையில் நடந்து கொள்வது தொடர்பாக சிறந்த போதனைகளை வழங்கியுள்ளது என்பதை அடுத்து வரும் வரிகளில் நாம் நிருபிக்க இருக்கின்றோம்.

தலாக் கொடுக்கப்படுகின்ற நிலையில் பெரும்பாலான தருணங்களில் குழந்தைகள் 9 வயது வரை தாயிடம்தான் இருக்கின்றனர். இந்தக் காலக்கட்டத்தில் குழந்தைகளின் கல்வி மற்றும் அதன் அனைத்து செலவீனங்களுக்கும் பொறுப்பாளியாக தந்தை இருக்கின்றார். தலாக் கொடுக்கப்படும் நிலையில் தவறு பெண்ணுடைய -தாக இருந்து தலாக் கொடுப்பதில் ஆண் உண்மையாளராக இருந்தாலும் கூட இஸ்லாத்தின் போதனைக்கேற்ப பெண்ணுக்கு அவளது கணவன் திருமணத்தின்போது தருவதாகக் கூறி இருந்த மஹர்களை (மணமகன் மணமகளுக்கு திருமணத்தின்போது கட்டாயமாகத் தர வேண்டியவை) முழுமையாக பெண்ணுக்குப் பெற்றுத் தர வேண்டும். ஷரீஅத் மஹர் இவ்வளவு கொடுக்க வேண்டும் என்று எதுவும் நிர்ணயம் செய்யாமல் இருந்தாலும் மஹர் கொடுப்பதன் நோக்கத்தையும் குறிக்கோளையும் கருத்தில் கொண்டவாறு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இரண்டாவது கலீ∴பாவான ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்கள் இது தொடர்பாகக் கூறியுள்ள வழிகாட்டலுக்கு ஏற்ப மஹர் தொகையானது குறைந்தபட்சம் ஆணின் ஆறு மாதம் முதல் ஒரு வருடம் வரையுள்ள வருமானமாக இருக்க வேண்டும். இதை தவிர எதையெல்லாம் ஒரு ஆண் தனது மனைவிக்கு நகையாகவும் பொருளாகவும் சொத்துகளாகவும் அன்பளிப்பாகவும் ஏற்கனவே கொடுத்திருந்தாரோ அவற்றை தலாக் கொடுக்கின்றபோது திரும்பப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை அவருக்கு இல்லை. அவை கோடிக்கணக்கில் இருந்தாலும் சரியே. இது பற்றிய இறை கட்டளை பின்வருமாறு:

وَاِنْ اَرَدْتُّمُ اسْتِبْدَالَ زَوْجٍ مَّكَانَ زَوْجٍ ۙ وَّاٰتَيْتُمْ اِحْدٰهُنَّ قِنْطَارًا فَلَا تَاْخُذُوْا مِنْهُ شَيْـًٔا ؕ اَتَاْخُذُوْنَهٗ بُهْتَانًا وَّاِثْمًا مُّبِيْنًا

நீங்கள் (ஒரு) மனைவியின் இடத்தில் (மற்றொரு) மனைவியை மாற்றிக் கொள்ள விரும்பும் நிலையில், நீங்கள் அவர்களுள் ஒருத்திக்கு(ப் பொருட்) குவியலொன்றினைக் கொடுத்திருந்தாலும் அதிலிருந்து சிறிதும் (திரும்ப) எடுத்துக் கொள்ளாதீர்கள். நீங்கள் அதனை அவதூறினாலும் மிக வெளிப்படையான பாவத்தாலும்தான் எடுத்துக் கொள்வீர்களா? (4:21)

மேலும் அல்லாஹ் கூறுகின்றான்:

اَلطَّلَاقُ مَرَّتٰنِ ۪ فَاِمْسَاكٌۢ بِمَعْرُوْفٍ اَوْ تَسْرِيْحٌۢ بِاِحْسَانٍ ؕ وَلَا يَحِلُّ لَكُمْ اَنْ تَاْخُذُوْا مِمَّاۤ اٰتَيْتُمُوْهُنَّ شَيْـًٔا

(மீண்டும் இணையத்தக்க) மணவிலக்கு இரு முறைகளே. பின்னர் தக்க முறையில் (மணவிலக்கு பெற்ற பெண்களைத்) தடுத்து வைத்துக் கொள்ள வேண்டும் அல்லது நன்முறையில் அனுப்பி வைக்க வேண்டும். நீங்கள் ஏற்கனவே அவர்களுக்கு வழங்கியதிலிருந்து எப்பொருளையும் (திரும்பப்) பெறுதல் உங்களுக்காகாது. (2:230)

தலாக் கொடுக்கப்பட்ட பெண்களுடன் ஒருபோதும் அநீதியுடன் நடந்து கொள்ளக் கூடாது என்று மேற்கண்ட இரண்டு வசனங்களிலும் நமக்கு போதனை வழங்கப்பட்டிருக்கின்றது. தலாக் கொடுக்கப்பட்ட பெண் வேறு ஏதாவதொரு இடத்தில் திருமணம் செய்ய விரும்பினால் அவர்களை அதிலிருந்து தடுக்கக் கூடாது. அவர்கள் திருமணம் செய்து கொள்ளும் வழியில் எந்தவொரு தடையையும் ஏற்படுத்தக் கூடாது என்பதையும் கீழ்க்காணும் வசனங்கள் நமக்கு தெரிவிக்கின்றன.

அல்லாஹ் கூறுகின்றான்:

وَاِذَا طَلَّقْتُمُ النِّسَآءَ فَبَلَغْنَ اَجَلَهُنَّ فَاَمْسِكُوْهُنَّ بِمَعْرُوْفٍ اَوْ سَرِّحُوْهُنَّ بِمَعْرُوْفٍ ۪ وَلَا تُمْسِكُوْهُنَّ ضِرَارًا لِّتَعْتَدُوْا ۚ وَمَنْ يَّفْعَلْ ذٰلِكَ فَقَدْ ظَلَمَ نَفْسَهٗ

நீங்கள் பெண்களுக்கு தலாக் கொடுத்து, அவர்கள் தம்முடைய தவணையி(ன் இறுதி எல்லையி)னை அடைந்து விட்டார்களாயின், நீங்கள் அவர்களைத் தக்க முறையில் தங்க வைத்துக் கொள்ளுங்கள் அல்லது நன்முறையில் அவர்களை அனுப்பி வையுங்கள். அநீதியிழைப்ப -தற்காக அவர்களை துன்புறுத்தித் தடுத்து வைத்துக் கொள்ளாதீர்கள். அவ்வாறு செய்பவன் தனக்கே அநீதியிழைத்துக் கொண்டான். (2:232)

மேலும் அல்லாஹ் கூறுகின்றான்:

وَاِذَا طَلَّقْتُمُ النِّسَآءَ فَبَلَغْنَ اَجَلَهُنَّ فَلَا تَعْضُلُوْهُنَّ اَنْ يَّنْكِحْنَ اَزْوَاجَهُنَّ اِذَا تَرَاضَوْا بَيْنَهُمْ بِالْمَعْرُوْفِ ؕ ذٰلِكَ يُوْعَظُ بِهٖ مَنْ كَانَ مِنْكُمْ يُؤْمِنُ بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ ؕ ذٰلِكُمْ اَزْكٰى لَكُمْ وَاَطْهَرُ ؕ وَاللّٰهُ يَعْلَمُ وَاَنْتُمْ لَا تَعْلَمُوْنَ ○

நீங்கள் பெண்களுக்கு மணவிலக்கு கொடுத்து, அவர்கள் தங்கள் தவணையைப் பூர்த்தி செய்து விட்டால், அவர்கள் நல்ல முறையில் ஒருவரையொருவர் விரும்பினால், தம்முடைய கணவர்களை மணந்து கொள்வதில் இருந்து நீங்கள் அவர்களை தடை செய்யாதீர்கள். உங்களுள் அல்லாஹ்விடத்தும் இறுதி நாளிடத்தும் நம்பிக்கை கொள்பவர்க்கு இது அறிவுரையாகும். இது உங்களுக்கு மிக்க அருளையும் மிக்க தூய்மையையும் வழங்கக் கூடியதாகும். அல்லாஹ் அறிவான். ஆனால் நீங்கள் அறிய மாட்டீர்கள். (2:233)

அடுத்து, கீழ்க்காணும் இரு வசனங்கள் தலாக் கொடுக்கப்பட்ட பெண்களுக்கு காலம் மற்றும் நிலைமைகளுக்கு ஏற்ப வாழ்க்கைக்குரிய பொருளைக் கொடுப்பது மற்றும் அவளுக்கு பயனளிக்கும் வகையில் நடந்து கொள்வது பற்றி வலியுறுத்திக் கூறுகிறது.

அல்லாஹ் கூறுகின்றான்:

وَلِلْمُطَلَّقٰتِ مَتَاعٌۢ بِالْمَعْرُوْفِ ؕ حَقًّا عَلَى الْمُتَّقِيْنَ மணவிலக்கு கொடுக்கப்பட்ட பெண்களுக்கு நியாயமான முறையில் வாழ்க்கைக்குரிய சில பொருள்களைக் கொடுப்பது அவசியமாகும். இறையச்சமுடையவர் -களுக்கு இது கட்டாயமாகும். (2:242)

لَا جُنَاحَ عَلَيْكُمْ اِنْ طَلَّقْتُمُ النِّسَآءَ مَا لَمْ تَمَسُّوْهُنَّ اَوْ تَفْرِضُوْا لَهُنَّ فَرِيْضَةً ۖۚ وَّمَتِّعُوْهُنَّ ۚ عَلَى الْمُوْسِعِ قَدَرُهٗ وَعَلَى الْمُقْتِرِ قَدَرُهٗ ۚ مَتَاعًۢا بِالْمَعْرُوْفِ ۚ حَقًّا عَلَى الْمُحْسِنِيْنَ

நீங்கள் பெண்களைத் தொடாமலோ அவர்களுக்கு மஹரை முடிவு செய்யாமலோ இருக்கும்பொழுது நீங்கள் அவர்களுக்கு மணவிலக்கு (தலாக்) கொடுத்தால் (அதனால்) உங்கள் மீது குற்றமில்லை. நீங்கள் நன்முறையில் அவர்களின் வாழ்க்கைக்கு வேண்டியவற்றுள் சிறிது வழங்குங்கள். செல்வந்தர் தன் தகுதிக்கு ஏற்பவும் ஏழை தன் தகுதிக்கு ஏற்பவும் வழங்க வேண்டும். நல்லவர்களுக்கு இது கடமையாகும். (2:237)

கீழ்க்காணும் வசனங்களில் பெண்ணுக்கு திருமணத்தின்போது செலுத்த வேண்டிய ஹக் மஹர் (மணமகன் தரப்பிலிருந்து மணமகளுக்குத் திருமணத்தின்போது கட்டாயமாகத் தரப்பட வேண்டியதொன்று) செலுத்துவது தொடர்பாக போதனை வழங்கப்பட்டுள்ளது.

அல்லாஹ் கூறுகின்றான்:

وَاِنْ طَلَّقْتُمُوْهُنَّ مِنْ قَبْلِ اَنْ تَمَسُّوْهُنَّ وَقَدْ فَرَضْتُمْ لَهُنَّ فَرِيْضَةً فَنِصْفُ مَا فَرَضْتُمْ

நீங்கள் அவர்களுக்கு மஹரை முடிவு செய்து விட்டு அவர்களைத் தொடுவதற்கு முன்னரே அவர்களுக்கு மணவிலுக்குக் கொடுத்து விட்டால்


## திருக்குர்ஆனிலிருந்து...

*நிச்சயமாக நம்பிக்கையாளர்கள் சகோதரர்கள் ஆவர். எனவே சகோதரர்களுக்கிடையில் நீங்கள் சமாதானத்தை ஏற்படுத்துங்கள். உங்களுக்குக் கருணை காட்டப்படுவதற்கு, நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். (49:11)*

**பீ.ஜே. சுலைமான்**
மற்றும் குடும்பத்தினர், கோயம்புத்தூர்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

*ஆணவத்திலிருந்து விலகிக் கொள்ளுங்கள் என நான் என் ஜமாஅத்திற்கு அறிவுறுத்துகிறேன். ஏனென்றால் கண்ணியமிக்க நமது இறைவனின் பார்வையில் ஆணவம் வெறுக்கத்தக்கதாகும்.*

**மர்ஹூம் M.K.S. முஹையுத்தீன் அலி**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

*ஒவ்வொருவருக்கும் ஒரு குறிக்கோள் உள்ளது. அவர் அதனிடத்துத் தமது முழுக் கவனத்தையும் செலுத்துகிறார். எனவே நீங்கள் நல்லவற்றில் ஒருவரையொருவர் முந்திக்கொள்ள முயலுங்கள். நீங்கள் எங்கிருந்தாலும், அல்லாஹ் உங்களை ஒன்று சேர்ப்பான்...... (2:149)*

**மர்ஹூம் முஹம்மது யூசுஃப்**
மற்றும் குடும்பத்தினர், உடன்குடி.

நீங்கள் முடிவு செய்த மஹரில் சரிபாதியை அவர்களிடம் ஒப்படைத்து விட வேண்டும். (2:238)

எனவே, இஸ்லாம் தலாக் கொடுக்கப்பட்ட பெண்ணின் உரிமைகளை முழுமையாக கருத்தில் கொண்டவாறு அவளுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளும்படி மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறியிருக்கின்றது.

وَلِلْمُطَلَّقٰتِ مَتَاعٌۢ بِالْمَعْرُوْفِ حَقًّا عَلَى الْمُتَّقِيْنَ○

மணவிலக்கு கொடுக்கப்பட்ட பெண்களுக்கு நியாயமான முறையில் வாழ்க்கைக்குரிய சில பொருள்களை கொடுப்பது அவசியமாகும். இறையச்சமுடையவர்களுக்கு இது கட்டாயம் ஆகும் (2:242) என்ற வசனத்திற்கு விளக்கம் அளித்தவாறு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இரண்டாவது கலீ.'.பா ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்கள் 'தப்ஸீரே ஸகீர்' -ல் இவ்வாறு கூறுகின்றார்கள்:

மணவிலக்கு கொடுக்கப்பட்டவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டுமென்று மீண்டும் கூறப்பட்டுள்ளது. இதற்கு காரணம் மனவிலக்குக் கொடுக்கப்பட்டவளிடத்தில் வெறுப்பும் அதிருப்தியும் ஏற்படுகின்றது. எனவே, அவளுடன் நல்ல முறையில் நடந்து கொள்வதன் பக்கம் சிறப்பாகக் கவனமூட்டுவது கட்டாயமாகி உள்ளது. இந்த கட்டளையின்படி செயல்பட்டால் பெருமளவில் குழப்பங்களும் சண்டைகளும் இல்லாதொழிந்து விடும். மேலும் தவிர்க்க முடியாத நிலையில் மட்டும் ஹலாலாக (ஆகுமானதாக) இருக்கின்ற தலாக் தற்போது அதனால் ஏற்படும் கசப்புகளுக்கும் சிக்கல்களுக்கும் காரணமாக இருக்காது. மாறாக, கட்டாயத்திற்கு உள்ளாகியே இருவரும் பிரிந்திருக்கிறோம் என்று உணர்ந்தால் அவர்களுக்கு இடையில் எந்த கசப்பும் ஏற்பட வழியில்லை. விதவைக்கு ஒரு வருடம் வரை இல்லத்திலிருந்து பயன் பெறும் வாய்ப்பை வழங்க வேண்டும் என்று கட்டளை இடப்பட்டிருக்கின்றது.

ஆனால், நம்பிக்கை கொண்ட ஒருவர் தலாக் கொடுக்கப்பட்டவளுக்கும் அவசியம் ஏற்படின் அவளுடன் நன்முறையில் நடந்து, இன்னும் சிறிது காலம் வரை இல்லத்திலிருந்து பயன் பெறும் வாய்ப்பை வழங்க வேண்டும் என்ற கருத்தையும் இக்கட்டளை சுட்டிக் காட்டுவதாகக் கொள்ளலாம். இக்கருத்து முற்றிலும் சரியானதுமாகும். ஏனென்றால், 'ம(த்)தாவுன்' என்பது சில பொருள்களைக் கொடுப்பது என்று மட்டும் அல்லாமல் பயன் பெறச் செய்தல் என்றும் பொருள்படும்.

இனி வரும் இதழ்களில் நாம் மனைவிமார்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வது மற்றும் அவர்களது உரிமைகள் தொடர்பான சில இஸ்லாமிய போதனைகளை எடுத்துக் கூறுவோம்.

*(தொடரும்...)*

## சிறந்த வஸீ'.'பா

**சியால்கோட் மாவட்டத்தில் பிரபல்யமான நபர் ஒருவர் இருந்தார். அவர் பைஅத் செய்த பிறகு ஹுஸூர் உங்களது அருளுக்குரிய நாவிலிருந்து ஏதாவது வஸீ'.'பா [திரும்பத் திரும்ப கூறும் சொற்களைக்] கூறுங்கள் என்றார்.**

**அதற்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் [அலை] அவர்கள் இவ்வாறு பதில் கூறினார்கள்: "தொழுகைகளை முறையாக நிறைவேற்றுங்கள். ஏனென்றால், எல்லா துன்பங்களிலிருந்து தப்பிப்பதற்குரிய திறவுகோல் இதுவே ஆகும். இதில்தான் எல்லா இன்பங்களும் கருவூலங்களும் நிறைந்திருக்கின்றன. உண்மையான உள்ளத்துடன் நோன்பு நோற்க வேண்டும். தான தருமங்கள் செய்யுங்கள். ஸலவாத்தும் இஸ்தி'.'ப்பாரும் ஓதி வாருங்கள். உங்களது உறவினர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். அண்டை வீட்டுக்காரர்களுடன் கருணையுடன் நடந்து கொள்ளுங்கள். மனித இனத்துடனும் இன்னும் சொல்வதென்றால், விலங்குகள் மீது கூட கருணை காட்டுங்கள். அவற்றின் மீது கூட அநீதி இழைக்கக் கூடாது. இறைவனிடம் எல்லா சமயங்களிலும பாதுகாப்பை வேண்டுங்கள். எல்லா சமயங்களிலும் இறைவன் முன் விழாத அந்த உள்ளம் தூய்மையற்றதும் தோல்வியுற்றதும் ஆகும். அது இழப்பிற்குரியதாக இருக்கும்.**

**பாருங்கள்! இறைவனே பாதுகாக்காமல் இருந்து விட்டால் மனிதன் ஒரு நொடிப்பொழுதைக் கூட கழிக்க முடியாது. பூமியின் கீழேயிருந்து வானத்தின் மேலே வரை ஒவ்வொரு நிலையிலும் அம்மனிதனின் எதிரிகள் நிறைந்திருக்கின்றனர். அவனது பாதுகாப்பு நம்முடன் இல்லாமல் இருந்தால் என்ன நடக்கும்? இறைவன் நேர்வழியில் நம்மை நிலைத்திருக்கும்படி செய்வதற்கு துஆ செய்து கொண்டிருங்கள். ஏனென்றால், அவனது நாட்டங்கள் இரண்டேயாகும். வழிகேட்டில் விட்டு விடுவது அல்லது நேர்வழியை வழங்குவது ஆகும்.** يضل به كثيرا و يهدى به كثيرا

**எனவே, வழிகேட்டில் விட்டு விடுவதிலும் அவனது நாட்டம் இருப்பதால் அவன் வழிகேட்டிலிருந்து நம்மைப் பாதுகாத்து நமக்கு நேர்வழியைக் காட்டுவதற்கான நல்வாய்ப்பை வழங்க நாம் எப்போதும் துஆ செய்து கொண்டிருக்க வேண்டும். மென்மையான இயல்பை உடையவர்களாக ஆகுங்கள். ஏனென்றால், எவர் மென்மையான இயல்புடன் நடந்து கொள்வாரோ இறைவனும் அவருடன் மென்மையாக நடந்து கொள்வான். உண்மையில் நல்ல மனிதன் பூமியில் தனது பாதங்களை மிகுந்த முன்னெச்சரிக்கையுடன் எடுத்து வைக்கின்றான். அதன் மூலம் ஒரு கிருமிக்குக் கூட அவனால் எந்த துன்பமும் ஏற்பட்டு விடக் கூடாது என்று அவன் கருதுகின்றான். சுருக்கமாக, உங்களது கைகளாலோ கால்களாலோ கண் போன்ற உறுப்புகளாலோ எவ்வகையிலான துன்பத்தையும் யாருக்கும் கொடுத்து விடாதீர்கள். மேலும் துஆக்கள் செய்து கொண்டிருங்கள்.**

[மல்பூஸாத் தொகுதி 3 பக்கம் 106; 2003 ஆம் ஆண்டு காதியானில் வெளியிடப்பட்டது].

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

*இவ்வுலகில் இறைவனைப் பார்க்கும் பேறிழந்தவர்கள் மறுமையிலும் இருளிலே இருப்பர். இறைவன் கூறுகிறான். இவ்வுலகில் குருடராக இருப்போர் மறுமையிலும் குருடராகவே இருப்பர். (17:73)*

**K. சலீம் அஹ்மது**
பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, திருச்சி.

### திருக்குர்ஆனிலிருந்து...

*மக்களே! நீங்கள் உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்த உங்களது இறைவனை மட்டும் வணங்குங்கள். அதனால், நீங்கள் எல்லா விதமான ஆபத்துகளிலிருந்தும் தவிர்ந்து கொள்ளலாம். (2:22)*

**A. பஷீர் அஹ்மது**
பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, மேலப்பாளையம்.

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : +91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 14 September 2017 Issue No. 37

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.300/- (Per Issue Rs. 6/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

# தஹ்ரீகே ஜதீத் சந்தாவை முழுமையாக செலுத்துவது ஒரு முக்கிய கடமையாகும்

தஹ்ரீகே ஜதீதின் நிதியாண்டு நவம்பர் 1 -ஆம் தேதியிலிருந்து ஆரம்பமாகி அக்டோபர் 31 ஆம் தேதி முடிவடையும் என்பது ஜமாஅத் சகோதரர்களுக்கு தெரியும். இவ்வகையில் இந்த வருடம் முடிவடைவதற்கு இப்போது ஏறக்குறைய இரண்டரை மாதங்களே எஞ்சியிருக்கின்றது. ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

“திருக்குர்ஆனில் அல்லாஹ் தன்னிடம் ஒருவர் செய்கின்ற வாக்குறுதி தொடர்பாக கேள்வி கேட்கப்படும் என்று கூறுகின்றான். அதாவது, அது தொடர்பாக நீங்கள் பதில் கூற வேண்டியது இருக்கும். எந்த மனிதர் வாக்குறுதி கொடுக்காமல் இருக்கின்றாரோ அவர் பலவீனமானவர் ஆவார். இறைவன் அவரை அற்பமான பார்வையுடன் பார்க்கின்றான். ஆனால் எவர் வாக்குறுதி செய்து விட்டு அதை நிறைவேற்றாமல் இருக்கின்றாரோ அவர் விலக்கி வைக்கப்பட்டவராக இருக்கின்றார். இறைவன் அவருக்கு தண்டனை வழங்குவான். எனவே, வாக்குறுதி கொடுப்பது என்பது சாதாரண விஷயமல்ல. முதலில் இவ்வளவு மகத்தான பணிக்காக இந்த அளவு சாதாரண தியாகங்கள் செய்வது என்பது வருத்தத்திற்குரிய விஷயமாகும். பிறகு, வாக்குறுதிகளை நிறைவேற்றுவதன் பக்கம் மிகவும் குறைவாகவே கவனம் செலுத்தப்படுகின்றது என்பது அதை விட அதிகமாக வருத்தத்திற்குரிய விஷயமாகும்.” (‘தஹ்ரீகே ஜதீது ஓர் இறைத் திட்டமாகும்’ பாகம் 3 பக்கம் 150)

மேலும், அன்னார் இவ்வாறு கூறுகின்றார்கள்: “ஆண்களே! பெண்களே! நீங்கள் அஹ்மதிய்யத்தை நேர்மையுடன் ஏற்றுக் கொண்டிருக்கின்றீர்கள் என்றால் தஹ்ரீகே ஜதீதின் குறிக்கோள்களையும் நோக்கங்களையும் நிறைவேற்றுவதற்காக எனக்கு ஒத்துழைப்பு நல்குவது உங்கள் கடமையாகும். நான் என்னவெல்லாம் கூறுகின்றேனோ அதை எனக்காக கூறவில்லை. இறைவனுக்காகவும் இஸ்லாத்திற்காகவும் கூறுகின்றேன். ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்காக கூறுகின்றேன் என்பதற்கு வானம், பூமி ஆகியவற்றின் இறைவன் சாட்சியாக இருக்கின்றான். நீங்கள் முன்னேறிச் செல்லுங்கள். உங்களது உடலையும் உள்ளத்தையும் செல்வத்தையும் இறைவனுக்காகவும் அவனது தூதர் (ஸல்) அவர்களுக்காகவும் தியாகம் செய்து விடுங்கள்.” (பான்ச் ஹஸார் முஜாஹிதீன் பக்கம் 8).

எல்லா மாவட்ட மற்றும் உள்ளூர் அமீர்களும் ஜமாஅத் தலைவர்களும் மாவட்ட மற்றும் உள்ளூர் தஹ்ரீகே ஜதீது செயலர்களும் தத்தமது ஜமாஅத்திலுள்ள தூய உள்ளம் கொண்ட சகோதரர்களிடமிருந்து அவர்கள் கொடுத்துள்ள வாக்குறுதிகளை நூறு சதவிகிதம் வசூல் செய்வது தொடர்பாக இப்போதிருந்தே வலுவாகவும் சிறந்த விளைவை ஏற்படுத்தக்கூடிய வகையிலும் முயற்சிகளைச் செய்ய ஆரம்பித்து விடுங்கள். அதன் மூலம் அஹ்மதிய்யா ஜமாஅத் தனது மகத்தான மரபுகளை நிலைநிறுத்தியவாறு கிலாஃபத்திடமிருந்து கிடைக்கக் கூடிய இவ்வருட இலக்கையும் கூட முழுமையாக நிறைவேற்றி இறைவனிடத்தில் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற நமது அன்பான எஜமானராகிய கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் துஆக்களிலிருந்து பெரும் பங்கைப் பெற்று கொள்கின்ற நற்பாக்கியத்தைப் பெற முடியும். அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. அல்லாஹ் உங்களது முயற்சிகளுக்கு நல் விளைவை ஏற்படுத்துவானாக. மேலும், தூய உள்ளம் கொண்ட எல்லா ஜமாஅத் சகேதரர்களையும் தனது அளவற்ற அருள்களுக்கும் கருணைக்கும் வாரிசாக்குவானாக.

– வகீலுல் மால் தஹ்ரீகே ஜதீத், காதியான்.

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

**முப்பத்தி ஐந்தாவது அடையாளம்:** முதல் மகன் மஹ்மூது அஹ்மது பிறந்த பிறகு எனது வீட்டில் இன்னோர் ஆண் குழந்தை பிறப்பது தொடர்பாக இறைவன் எனக்கு நற்செய்தி வழங்கினான். இந்த முன்னறிவிப்பு பற்றிய பிரசுரமும் மக்கள் மத்தியில் வெளியிடப்பட்டது. பிறகு இரண்டாவது மகன் பிறந்தார். அவருக்கு பஷீர் அஹ்மது என்று பெயர் வைக்கப்பட்டது.

**முப்பத்தி ஆறாவது அடையாளம்:** பஷீர் அஹ்மதிற்குப் பிறகு இன்னோர் ஆண் குழந்தை பிறப்பது பற்றி இறைவன் எனக்கு நற்செய்தி வழங்கினான். பிறகு அந்த நற்செய்தியும் பிரசுரம் மூலமாக மக்கள் மத்தியில் வெளியிடப்பட்டது. அதற்குப் பிறகு மூன்றாவது மகன் பிறந்தார். அவருக்கு ஷரீஃப் அஹ்மது என்று பெயர் வைக்கப்பட்டது.

**முப்பத்தி ஏழாவது அடையாளம்:** இதற்குப் பிறகு (எனது மனைவி) கருத்தரித்திருந்த நாட்களில் ஒரு மகள் பற்றிய நற்செய்தியை இறைவன் எனக்கு வழங்கினான். அந்த மகன் தொடர்பாக تُنَشَّأُ فِي الْحِلْيَةِ அவள் நகைகளில் வளர்ச்சியடைவான். அதாவது அவர் பஞ்சத்தினால் மரணமடைய மாட்டான். வறுமையைப் பார்க்கவும் மாட்டான் என்று இறைவன் கூறினான். இதற்குப் பிறகு மகள் பிறந்தாள். அவளுக்கு முபாரக்காக பேகம் என்று பெயர் வைக்கப்பட்டது. அவள் பிறந்த ஏழு நாட்கள் கழிந்ததும் சரியாக அகீகா கொடுக்கப்பட்ட அந்த நாளில் முற்றிலும் முன்னறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருந்ததற்கு ஏற்ப பண்டிட் லேக்ராம் ஒருவரது கையால் கொலை செய்யப்பட்டார் என்ற இந்த செய்தி வந்தது. இவ்வாறு ஒரே சமயத்தில் இரண்டு அடையாளங்கள் நிறைவேறின.

**முப்பத்தி எட்டாவது அடையாளம்:** மகள் பிறந்த பிறகு எனக்கு இன்னொரு மகன் தொடர்பாக நற்செய்தி வழங்கப்பட்டது. அந்த நற்செய்தியும் தொன்மையான நடைமுறைக்கேற்ப வெளியிடப்பட்டது. பிறகு மகன் பிறந்தார். அவருக்கு முபாரக் அஹ்மது என்று பெயர் வைக்கப்பட்டது.

**முப்பத்தி ஒன்பதாவது அடையாளம்:** எனக்கு இறை அறிவிப்பின் மூலம் இன்னொரு மகன் பிறப்பான். ஆனால் அவன் இறந்த விடுவான் என்று தெரிவிக்கப்பட்டது. அந்த இறை அறிவிப்பு அது நிறைவேறும் நேரத்திற்கு முன்னதாகவே பலரிடமும் கூறப்பட்டது. அதற்குப் பிறகு மகன் பிறந்தான். சில மாதங்களுக்குப் பிறகு அவன் மரணித்து விட்டான்.

**நாற்பதாவது அடையாளம்:** இந்த பெண் குழந்தைக்குப் பிறகு இன்னொரு பெண் குழந்தை பற்றிய நற்செய்தி வழங்கப்பட்டது. அதன் சொற்கள் இதுவாகும்: துஹ்தே கிராம் - கண்ணியத்திற்குரிய புதல்வி. இந்த இறை அறிவிப்பு அல் ஹகம் மற்றும் அல் பத்ர் ஆகிய இரு பத்திரிகைகளிலும் அல்லது ஒருவேளை இந்த இரு பத்திரிகைகளில் ஒன்றிலும் வெளியிடப்பட்டது. அதற்குப் பிறகு பெண் குழந்தை பிறந்தது. அதற்கு அமத்துல் ஹஃபீஸ் என்று பெயர் வைக்கப்பட்டது. அக்குழந்தை இப்போது வரை உயிருடன் இருக்கின்றது.

(ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 226-228)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad